பருவவெளியீட்டுப்பகுதி

விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 28 பங்குனி 22 றஜப் 23 இதழ் 53
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 4-4-1986

## "உண்மையான யுத்தம் இப்போதுதான் நடக்கிறது"

### அரச அதிபர்கள் மாநாட்டில் 'காமினி'

(இ. கந்தசாமி)

''இப்போதுதான் நாட்டில் உண்மையான யுத்தம் நடைபெறுகிறது. இது வெறுமனே ஒரு உள்நாட்டு விஷயமல்ல. தமிழ்நாட்டில் தீவிரவாதிகளுக்குப்பயிற்சி வழங்கப்பட்டு வருகின்றது.

நசுக்கப்பட்ட மக்கள் என்ற நீரில் நீந்துகின்ற மீன்களே தீவிரவாதிகள். மக்கள் நசுக்கப்படுவது அகலுமானால்தீவிரவாதமும் தானுகவே இல்லாதொழியும்''

நேற்றுக்கொழும்புபண்டாரநாயகா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற அகில இலங்கை அரச அதிபர்கள் மாநாட்டில் உரையாற்றுகையில் காணி, மகாவலி அபி

(5-ம் பக்கம் பார்க்க)

# சுவிஸிலுள்ள இலங்கை தமிழர் திருப்பி அனுப்பப்படமாட்டார்

## சுவிஸ் வெளியுறவு அமைச்சர் பஹத்திடம் உறுதி

(புதுடில்லி)

**சுவிட்சர்லாந்தில் அரசியல் புகலிடம்கோரி அங்கு தஞ்சமடைந்துள்ள இலங்கைத் தமிழர்கள் உடனடியாகத் திருப்பி அனுப்பப்படமாட்டார்கள். இத்தகவலைத் தற்போது இந்தியா வந்துள்ள சுவிஸ் வெளியுறவு அமைச்சர் தெரிவித்துள்ளார்.**

தற்சமயம் அரசியல் புகலிடம்கோரி சுவிட்சர்லாந்திற்கு வந்துள்ள ஆயிரக்கணக்கான இலங்கைத் தமிழர்களை உடனடியாகவோ அல்லது ஒட்டுமொத்தமாகவோ இலங்கைக்குத்திருப்பி அனுப்பிவைக்கும் உத்தேசம் தமக்கு இல்லை என சுவிஸ் வெளிநாட்டமைச்சர் திரு பியறே ஓபேர்ட் நேற்றுமுன்தினம் இந்திய வெளியுறவு அமைச்சர் திரு. பலிராம் பஹத்துடன் நடாத்திய பேச்சுவார்த்தைகளின் போது உறுதியளித்தார்

தற்சமயம் சுவிட்சர்லாந்தில் தஞ்சமடைந்துள்ள 3000-4000 இலங்கைத் தமிழர்கள் தொடர்பான விசாரணைகள் தனித்தனியாக மேற்கொள்ளப்படுமென்றும், இலங்கை திரும்பும் பட்சத்தில் உயிர், ஆரோக்கியம், சேமநலம் ஆகியவற்றுக்கு ஆபத்து ஏற்படும் எனக்கருதப்படுவோருக்கு சுவிஸ் அரசு நிச்சயம் புகலிடமளித்தே தீருமென்றும், 1983க்குப்பின் இலங்கை இன நெருக்கடி காரணமாய் நாட்டிலிருக்க அஞ்சி சுவிட்சர்லாந்துக்கு வந்த இலங்கைத்தமிழர்களில் இதுவரை ஆறு பேர் மட்டுமே சிறு சட்ட மீறல்களுக்காக இலங்கைக் குத்திருப்பியனுப்பட்டுள்ளனரென்றும் அமைச்சர் ஓபேர்ட் மேலும கூறினர்.

இலங்கைத் தமிழரின் தற்போதையநிலை குறித்து இந்திய வெளியுறவமைச்சர் தம்மிடம் ஆழ்ந்த கவலை தெரிவித்ததாகவும் திரு ஓபேர்ட் கூறினர். (ஷ)

## கொக்காவில் கண்ணிவெடியில் 25 இராணுவம் பலியாம்!

### 'புலிகள்' அறிக்கை

(யாழ்ப்பாணம்)

கொக்காவிலில் வாகனங்களிலும் நடந்தும்வந்த இராணுவத்தினர்மீது தமது இயக்க வீரர்கள் நடாத்திய தாக்குதலின்போது ஒருலெப்டினன்ட் உட்பட 25 இராணுவத்தினர் பலியானதாகவும், பலர் காயமடைந்ததாகவும் தமது தரப்பில் நான்கு போராளிகள் பலியானதாகவும் 'தமிழீழ விடு

(5ம் பக்கம் பார்க்க)

## கொள்ளையை ஆட்சேபித்து இன்று கடையடைப்பு!

(யாழ்ப்பாணம்)

யாழ் விக்ரர் அன் சன்ஸ் நிறுவனத்தில் நடைபெற்ற கொள்ளைச்சம்பவத்தை கண்டித்தும் ஆட்சேபித்தும் இன்று கடையடைப்புச் செய்யுமாறு

[5ம் பக்கம் பார்க்க]

## கொழும்பு மேல்நீதிமன்றில் 14 வயது சந்தேகநபர்!

[கொழும்பு]

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின்கீழ் சிதம்பரப்பிள்ளை செல்வச்சந்திரன் என்றசிறுவன் ஒருவன்மீது கொழும்பு மேல் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது

பதினுன்கு வயதான இச்சிறுவன் திருகோணமலை மாணிக்கவாசகர் வீதியைச் சேர்ந்தவன் கடந்த ஆண்டு இச்சந்தேகநபர் தமிழீழ மக்கள் விடுதலைக்கழகத்துக்கு (புளொட்) ஆதரவான சுவரொட்டிகளை ஒட்டியதாகவும், பிரசுரங்களை விநியோகித்ததாகவும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளார்.

கொழும்பு மேல்நீதிமன்ற நீதிபதி ரீ.க விக்னராஜா முன்னிலையில் இச்சிறுவன் மீதான வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. நீதிபதி இம்மாதம் 25ந் திகதி வரை இவ்வழக்கினை ஒத்திவைத்து அன்றையதினம் சகல சாட்சிகளையும் நீதிமன்றில் ஆஜராகும்படி பணித்துள்ளார். (கி)

## க. பொ. த. சாதாரணம் முடிவுகள் வெளியாகின

(கொழும்பு)

கடந்த ஆண்டு டிசம்பரில் இடம்பெற்ற கல்விப்பொதுத் தராதர சாதாரணதரப் பரீட்சை முடிவுகள் தபால்களில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

புத்தாண்டு விடுமுறைக்கு முன்னர் பரீட்சார்த்திகள் அனைவருக்கும் கிடைக்கும்வகையிலேயே இவை அனுப்பப்பட்டுள்ளன.

முதலில் பாடசாலைப் பரீட்சார்த்திகளுக்கும், தொடர்ந்து தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கும் இவை கிடைக்கும் வகையில் தபால்களில் சேர்க்கப்பட்டுள்ளன.

நான்கு லட்சத்து எழுபத்து நாலாயிரம் பரீட்சார்த்திகள கடந்த க பொ த. சாதாரண தரப்பரீட்சைக்குத்தோற்றினர். இவர்களில் அரைவாசிப்பேர் பாடசாலை மாணவர்கள் என்று பரீட்சை ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

(8ம் பக்கம் பார்க்க)

## 'யாழ்தேவி' ஓட நாலு மாதங்கள் செல்லும்

(கொழும்பு)

யாழ்ப்பாணத்துக்கான புகையிரத சேவை மீண்டும் ஆரம்பமாக சுமார் மூன்று அல்லது நாலு மாதகாலம் பிடிக்கும்என்று தெரியவருகின்றது

யாழ். புகையிரதவண்டிக்கான பாதுகாப்பு அளிக்கும் திட்டமொன்று தற்போது

[5ம் பக்கம் பார்க்க]

## பலியானேர் ஒன்பதாக உயர்வு

[கொழும்பு]

கொக்காவில் கண்ணிவெடிச் சம்பவத்தையடுத்து படுகாயத்துக்குள்ளாகிக் கொழும்பு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்த நான்கு ராணுவத்தினரில் ஒருவர் இறந்து விட்டதாகவும் இவருடன் சேர்த்துப் பலியான ராணுவத்தினரின் தொகை 9 ஆக உயர்ந்துள்ளதாகவும் அரச வட்டாரங்கள் தெரிவித்தன. (பி)

## வங்கி முகாமையாளர் கடத்தப்பட்டார்

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணத்தில் உள்ள வங்கியின் முகாமையாளர் ஒருவர் நேற்றுக்கடத்தப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

**சகல விடுதலை இயக்கங்களுக்கும் ஓர் பணிவான வேண்டுகோள்**

கடந்த பெப்ரவரி மாதம் 1ம் திகதி சனிக்கிழமை பி ப 6-30மணிக்கு எமது வியாபார ஸ்தலமான நியூ லலிதா நகைமாளிகையில் கொள்ளைபோன நகைகளில் ஒருபகுதியையாவது மீட்டுத்தரும்படி மிகப் பணிவன்புடன் சம்பந்தப்பட்டவர்களை கேட்டு மாதம் 2ஆகியும் இதுவரையில் எவ்வித முடிவும் இல்லாமலிருப்பதையிட்டு மிகவும் வருந்துகின்றேம். மேலும் காலம் தாழ்த்தாமல் உடனடி நிவாரணம் அளிக்கும்படி பணிவன்புடன் வேண்டிக்கொள்கின்றேம்.

உரிமையாளர்,

நியூ லலிதா ஜுவலர்ஸ்

C-1593

## "இலங்கையின் நிலைகண்டு வேதனையடைகின்றேன்"

### பிரிட்டிஷ் நீச்சல் நிபுணர் கருத்து

[கொழும்பு]

''எந்நேரமும் எவ்விடத்திலும் புன்னகைபூத்த முகங்களையே பார்த்து மகிழக்கூடிய இலங்கையில் வாழும் மக்கள் அரசியல் பேதங்களால் பிளவுபட்டு நிற்பதைக்கண்டு நான் மிகுந்த வேதனை அடைகின்றேன்''.

தற்சமயம் இலங்கைக்கு வந்துள்ள பிரிட்டிஷ் நீச்சல்துறை நிபுணர் திரு. போல் ஜோன் கிறைன் கொழும்பில் பத்திரிகையாளர் மதியில் பேசும்போது இவ்வாறுகூறினர்.

காலஞ்சென்ற சர்வதேசப் புகழ்பெற்ற ஈழத்து நீச்சல் வீரர் 'ஆழிக்குமரன்' ஆனந்தன் நினைவாக ஒரு சிங்களவரையும், ஒரு தமிழரையும் நீண்டதூரநீச்சலில் பயிற்றுவிப்பதற்கே தாம் இலங்கை வந்துள்ளதாக திரு. கிறைன் தெரிவித்தார். (ஷ)

# வரி விளம்பரம்

## தேவை

ரேடியோ, ரீ வி. திருத்துவதற்கு அனுபவமுள்ளவர் உடன் தேவை. தொடர்பு: V மைக்கல், இல. 408, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (பேக்கரி லேனிற்கு அருகாமையில்) (C 1573)

மருதனமடத்தில் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள Recording Barற்கு வேலை தெரிந்த அல்லது பழக ஆர்வமுள்ள பெண்கள் தேவை. 06-04-86 ஞாயிற்றுக்கிழமைக்குமுன்தொடர்புகொள்ளவும்: ஆனந்தா ரெக்கோடிங் பார், தாவடி. (C 1549)

தினமும் காலையும் மாலையும் இருநேரப் பூசைகள் நடக்கும் கோப்பாய் பலானை கண்ணகை அம்மன்கோயிலுக்கு உதவிப் பூசகர் ஒருவர்தேவை. விரும்பியோர் எதிர்பார்க்கும் சம்பளத்தையும் குறிப்பிட்டு 15-04-86ற்கு முன்னர் செயலாளருக்கு விண்ணப்பிக்கவும். மேற்கொண்டு வேண்டிய விபரங்கட்கு காரியதரிசியுடன் தொடர்புகொள்க. (C 1571)

யாழ்ப்பாணம் பெரியகடையில் அமைந்து இருக்கும் Fancey கடை ஒன்றுக்கு விற்பனையாளர் (பெண்) தேவை. ஆரம்ப சம்பளம் 350/- ரூபாய் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும் ஒரு புகைப்படத்துடன் உடன் விண்ணப்பிக்கவும். யாழ். மாநகர எல்லைக்குள் வசிப்பவர் விரும்பத்தக்கது. விளம்பர இல. C-1550, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். C-1550

## விற்பனைக்கு

நீர்வேலி வடக்கு மாசிபன் சந்திக்கருகில் ஒன்றரைப்பரப்புக் காணியும், புதிய வீடும், விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: த. பவளகேசரி, பவளம் ஸ்ரோர்ஸ், நீர்வேலி வடக்கு அல்லது மதராஸ் யுவலறி மாட், 264, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம். [C 1572]

புறொயிலர் குஞ்சுகள் சேவல் குஞ்சுகளுக்கு முற்பணம் செலுத்தியவர்களுக்கு 4/4/86 வெள்ளிக்கிழமைகோழிக்குஞ்சுகள் விநியோகிக்கப்படும். சற்குணராஜா அன் பிறதர்ஸ் பிரம்படி, கொக்குவில். C 1568

## வகுப்புகள்

ரேடியோ, ரீ. வி, வயறிங், வெல்டிங், மோட்டார் மெக்கானிசம், தட்டெழுத்து, சுருக்கெழுத்து- புதிய வகுப்புக்கள் 04-04-86, 05-04-86இல் ஆரம்பமாகின்றன. முதலில் சேருபவரிடம் குறைந்த கட்டணம் அறவிடப்படும். சான்றிதழ் பெறுமதியானது. Vispa Engineeri g, 328, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். C-1508

தொழில் புரிபவர்களின் வேண்டுதற்கிணங்க தொலைக்காட்சி பயிற்சி வகுப்புகள் 5-4-86 முதல் [சனி' ஞாயிறு நாட்களில்] பிரத்தியேகவகுப்பு நடைபெறும். தொடர்புகொள்ளவும்: சி. குணாளன், ரெலிகோணர், சாவகச்சேரி. [C1535]

## கல்வி

சமூகக்கல்வி நூல் (ஆண்டு 9, 10, 11 புதியபாடத்திட்டம்) வெளிவந்துவிட்டது. ஆசிரியர் க. குணராசா, ஸ்ரீலங்கா புத்தகசாலை, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (C 1498)

S. L. A. S. பரீட்சைக்குரிய பொதுவுளச் சார்பு, பொது அறிவு. கிரகித்தல் நூல்கள் வெளிவந்துவிட்டன. (ஆசிரியர் க. குணராசா) ஸ்ரீ லங்கா புத்தகசாலை, யாழ்ப்பாணம். (C 1499)

## சேவை

தரமான - தெளிவான ''போட்டோ ஸ்ரட்'' பிரதிகளையும் ''ரோனியோ'' பிரதிகளையும் பெற்றுக்கொள்ளவும் சிறந்த முறையிலான ஆங்கிலம், தமிழ் 'ரைப்பிங்' வேலைகளை குறுகியநேரத்தில் செய்துகொள்ளவும் வடபகுதியில் உள்ள ஒரே நிறுவனம்- 'கிளீன் ஹட்' (Kleen Khut), இல. 239, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 28823. [C 1562]

குழந்தைகள், மாணவிகள், யுவதிகள், பெண்களுக்கான சகலவிதமான உடைகளை நேர்த்தியாகவும், நவீனமுறையிலும் குறிப்பிட்ட தவணையில் நம்பிக்கையோடு தைத்துக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய நிறுவனம்- 'கிளீன் ஹட்' (Kleen Khut), இல:239, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 28823. [C 1563]

## மின் தடை

### இலங்கை மின்சார சபையின் முக்கிய அறிவித்தல்

1986-04-06ந் திகதி ஞாயிற்றுக்கிழமை முக்கிய திருத்த வேலைகள் காரணமாக, காலை 8-00 மணி தொடக்கம் மாலை 5-00 மணி வரை யாழ்ப்பாணம் மாநகரசபை எல்லைக்குள்ளும், திருநெல்வேலி, கோண்டாவில், கோப்பாய், கொக்குவில் ஆகிய இடங்களுக்கும் மின் விநியோகத் தடை ஏற்படுமென சகல மின் பாவனையாளர்களுக்கும் அறியத்தருகின்றோம்.

இம்மின் தடையால் பாதிப்படையும் சகல மின்நுகர்வோரிடமிருந்து அவர்களுக்கு ஏற்படும் வசதியீனங்களுக்காக இலங்கை மின்சாரசபை தனது மனவருத்தத்தைத் தெரிவித்துக்கொள்ளுகின்றது.

இப்படிக்கு
மின் பொறியியலாளர்,
யாழ். பிரதேச அலுவலகம்,
இலங்கை மின்சார சபை,
சுன்னாகம்.
[A 545]

## கேள்விப்பத்திர அறிவித்தல்

1949 தரம் பிரிக்கப்பட்ட வெற்றுச்சாக்குகள் விற்பனைக்காக கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன. முடிவுத் திகதி 12-04-1986 விண்ணப்பப் பத்திரங்களுக்கும் விபரங்களுக்கும் சங்க வேலை நேரத்தில் தொடர்புகொள்ளவும்.

பொதுமுகாமையாளர்.
தென்மராட்சி மேற்கு
ப. நோ. கூ. சங்கம்,
கைதடி.
1986-04-02.
[A 544]

## 31-ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



ஆசிரியமணி
நா. தம்பிரத்தினம்

அன்னை மடியில்: 26-08-1908

ஆண்டவன் அடியில்: 07-03-1986

அன்புடனும் பாசத்துடனும்பழகி, இங்கிதமாய் பேசி, ஈடின்றி வாழ்ந்த எமது குடும்பத் தலைவர் காலம் சென்ற ஆசிரியமணி நா. தம்பிரத்தினம் அவர்களின் ஈமக்கிரியைகளில் கலந்துகொண்டவர்களுக்கும், அனுதாபச் செய்தி அனுப்பியவர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம். மேலும் அன்னாரின் சபீண்டீகரணக் கிரியைகள் 5ம் திகதி சனிக்கிழமை 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் அன்பர்கள், அவரின் ஆசிரிய நண்பர்கள் அனைவரையும் எம்முடன் கலந்து அன்னாரின் ஆத்மாசாந்திபெற பிரார்த்திக்குமாறு வேண்டுகின்றோம்.

மனைவி, மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
உறவினர்கள்.
[A 531]

## வீடியோ கிளப் உரிமையாளர் சங்கம்

[யாழ்ப்பாணம்]

யாழ். மாவட்டத்திலுள்ள 'வீடியோ கிளப்' உரிமையாளர் சங்கத்தின் நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர் திரு. ஆ. தேவசகாயம், செயலாளர் திரு த. ரோகன் ரவிராஜ், பொருளாளர் திரு. க சின்னராஜா.

'வீடியோ கிளப்' உரிமையாளர்கள் தற்போதய சூழ்நிலையில் எதிர் நோக்கும் பிரச்சனைகள் தொடர்பான மேற்படி நிர்வாக சபையினர் ஆராய்ந்து வருகின்றனர். இவ்விடயம் தொடர்பாக நாளை 5ந் திகதி சனிக்கிழமை பொதுக் கூட்டமொன்றினை வீடியோ கிளப் உரிமையாளர்கள் நடாத்தவுள்ளனர். (ஐ)

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றில்

தும்பளை, பருத்தித்துறை காலஞ்சென்ற இராமநாதன் ஐங்கரநாதன் என்பவரது மரணசாதனம் எழுதப்படாத சொத்துக்களுக்கு நிர்வாகத் தத்துவப் பத்திரம் வழங்கும் விடயமாக.

- மரணமெய்தியவர்.

வழ. இல:
தத்துவம்/3953

இராமநாதன் ஐங்கரநாதன் கைம்பெண் புவனேஸ்வரி, மே/பா. எஸ் செல்வரட்ணம், கோப்பாய் வடக்கு, கோப்பாய்.

- மனுதார்.

மேலே இலக்கம் கொண்ட வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்து போனவரின் மரணசாதனம் இல்லாத மரணச்சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதற்கு இணங்க பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது. அக்கறையுள்ள எவரேனும் 1986ம் ஆண்டு வைகாசி மாதம் 16ந் திகதி காலை 9-00 மணிக்கு இந்நீதிமன்றத்தில் தோன்றி அவ்வாறு பதியப்பட்டுள்ள பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றான கட்டளையாக்கப்படலாகாது என்பதற்குக்காரணம் காட்டுமாறு இத்தால்தேவைப் படுத்தப்படுகின்றது.

1986ம் ஆண்டு பங்குனி மாதம் 13ம் திகதி.

நீதிமன்றக்கட்டளைப்படி,
கு. குலசிங்கம்,
பதிவாளர்.

வரைதல்;
அ. மகேசன்,
மனுதாரின் சட்டத்தரணி.
[C 1526]

## பண்டாரக்குளம் பிள்ளையார் உற்சவம்

[யாழ்ப்பாணம்]

நல்லூர் பண்டாரக்குளம் ஸ்ரீ மருதவளவு பிள்ளையார் ஆலய வருடாந்த உற்சவம் இம் மாதம் 6ம் திகதி ஞாயிற்றுக் கிழமை நண்பகல் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

சித்திரை புதுவருட தினமான 14ம் திகதி திங்கட்கிழமை தேர்த் திருவிழாவும் 15ம் திகதி தீர்த்தோற்சவமும் நடைபெறும்,

இம்முறை புதிதாக திருத்தி அமைக்கப்பட்ட தேரில் பிள்ளையார் வலம் வருவார். இத்தேர் திருநெல்வேலி கனக சிற்பாலய ஸ்தபதி கனக இராசரத்தினம்குழுவினரால் அமைக்கப் பெற்றதாகும்.

## இலைக்கஞ்சி வழங்குகிறார்கள்

[சுழிபுரம்]

சுழிபுரம் காட்டுப்புலம் குடாக்கனை ஆகிய பகுதிகளிலுள்ளபிள்ளைகளுக்குபோறூட் நிறுவனத்தினர் இலைக்கஞ்சி சத்துணவு வழங்குதலை ஆரம்பித்துள்ளனர் இம்மாதம் முதலாம் திகதி முதல் இவ்வுணவு வழங்கும் திட்டம் தினமும் செயற்படத்தொடங்கியுள்ளது சுழிபுரம் சுகாதார அபிவிருத்திக் கழகத்தினரின் வேண்டுதலை ஏற்று இச்சத்துணவு வழங்கும் திட்டம் செயல் படுத்தப் பட்டுள்ளது. உணவு வழங்கும் ஆரம்ப வைபவத்தில் பல பொது இயக்கப்பிரமுகர்கள் பங்கு கொண்டனர்.

## 1 -வதுஆண்டு நினைவஞ்சலி



திருமதி புஸ்பவதி

மண்ணுலகு: 11-3-1951

விண்ணுலகு: 16-4-1985

திதி: 4-4-1986 வெள்ளிக்கிழமை

அழகுருவாய் அன்பின் திருவுருவாய் பண்பின் சிகரமாய் அறிவின் சுடராய் வாழ்வின் வழிகாட்டியாய் அன்பின் திருமகளே! நீங்கள் இறைவனடி சேர்ந்து ஓராண்டு பூர்த்தியாகி விட்டபோதிலும் உங்கள் அன்பும் பண்பும் பாசமும் எங்கள் இதயத்தை விட்டு என்றும் அகலாது உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

உங்கள் பிரிவால்
துயருறும் அன்புள்ள

அப்பு, அம்மா,
அக்கா, அருமைத்தம்பி,
தங்கைமார்.
அத்தான்மார்,
பெருமக்கள்,
மற்றும் உற்றார்,
உறவினரும்.

கோப்பாய் வடக்கு,
அரசடி,
கோப்பாய். (C1561)

## பிரயாண ஒழுங்கு

குவைத், டுபாய், சவுதி அரேபியா

செல்பவர்களுக்கு, பிரயாண ஒழுங்குகள் உடனடியாகச் செய்துகொடுக்கப்படும்.

கிளீனேஸ் (ஆண், பெண் இருபாலாரும்)

10- 4- 1986 க்கு முன்பாகத் தொடர்பு கொள்ளவும்.

யூனிவேசல் ஏஜென்சி,
பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு முன்பாக
125 (455) ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம்.
(C 1530)

# சோவியத் தொலைக்காட்சியில் அமெரிக்க வறுமை நிலை!

மாஸ்கோ, ஏப் 3

**சோவியத் யூனியனின் தொலைக்காட்சிச் சேவையில் அமெரிக்காவின் வறுமை நிலை பற்றிய விவரணச் சித்திரமொன்று நேற்றுக் காண்பிக்கப்பட்டது. இதில் வறிய அமெரிக்கக் குடும்பங்களின் நிலைமை, வேலையின்மை, வீட்டு வசதியின்மை என்பன பற்றி விரிவாக விளக்கமளிக்கப்பட்டது.**

இந்த விவரணச் சித்திரம் சோவியத் தொலைக் காட்சிச் சேவையில் சிறப்பிடம் பெற்றிருந்ததென்று தெரிவிக்கப் பட்டிருந்தது. சகல அமெரிக்க மாநிலங்களினதும் வறுமை நிலையைத் தழுவியதாக இது காண்பிக்கப்பட்டது.

இந்த விவரணச்சித்திரத்தின் தகவலின்படி அமெரிக்காவில் சுமார் 34 சத வீதமானவர்கள் வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழ்க்கை நடத்துவது தெரிய வந்துள்ளது.

8 வீதமானவர்கள் வேலை வாய்ப்புக்கள் எதுவுமின்றிக் காணப்படுகின்றார்கள். 3 வீதமானவர்கள் வீட்டு வசதிகளின்றி இருப்பது வெளிக் காட்டப்பட்டது.

இத்தகைய வறிய நிலைமையிலுள்ளோரில் பெரும் பான்மையினர் கறுப்பின மக்களாவர் என்பதும் குறிப்பிடத் தக்கது

அமெரிக்காவில் விரிவடைந்து செல்லும் இந்த வறிய நிலைமையினாலேயே அந்த நாட்டில் குற்றச்செயல்கள் மலிந்து வருகின்றன எனவும் அந்த விவரணச் சித்திரத்தில்சுட்டிக் காட்டப்பட்டது. (கி)

## சோவியத்தில் மது விலக்கு

(லண்டன்)

சோவியத் யூனியனில் படிப்படியாக மதுவிலக்கை அமுல் செய்வதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. மதுக்கடைகள் சிறிது சிறிதாக மூடப்பட்டுவருகின்றன. மது குடிப்பதற்கும், விற்பனை செய்வதற்கும் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

சோவியத்யூனியனின் செய்திக் குறிப்பால், ''குடிப்பதால் தொழிலாளர்கள்வேலை செய்யும் ஆற்றல் குறைகிறது தொழிலாளர்களின் ஆற்றல் குறைந்தால் உற்பத்தி குறைகிறது. மாணவர்களும் குடித்துக் கெடுகிறார்கள். இதனால் படிப்படியாக மதுவிலக்கைக் கொண்டு வருகிறோம்'' எனப் பிராவ்டா தெரிவித்துள்ளது. [கெ]

உலகச் செய்திகள்

## பிஜித் தீவுக்கு தமிழ் நூல்கள் அன்பளிப்பு

சென்னை, ஏப் 3

தமிழ்நாடு மாநில அரசாங்கம் பத்தாயிரம் தமிழ்ப்பாடப் புத்தகங்களை பிஜித் தீவுகளுக்கு அன்பளிப்புச் செய்துள்ளது

பிஜி நாட்டு அரசாங்கம் அங்குள்ள மாணவர்களின் நலன் கருதி விடுத்துள்ள வேண்டுகோளையடுத்த இந்த புத்தக அன்பளிப்பு இடம் பெற்றுள்ளது

தமிழக அரசின் இந்த அன்பளிப்புக் குறித்துக் கல்வி அமைச்சர் திரு. அரங்கநாயகம் தமிழக சட்ட சபையில் நேற்று அறிவித்தார். (கி)

## ஹேலிஸ் வெயில்

(சென்னை)

ஹேலிஸ் வால்வெள்ளியின் தோற்றத்தால் இப்போது வெயில் அதிகமாக இருக்கிறது.

இவ்வாறு சென்னை லயோலா கல்லூரிப் பேராசிரியர் கே. வேல் முருகன் தெரிவித்துள்ளார்.

அவர் தமது தகவலில்: வால்நட்சத்திரம் தோன்றுவதால் எந்தக் கேடும் நேராது. ஆண்டுதோறும் 3 வால் வெள்ளிகள் தோன்றுகின்றன. ஹேலி வால வெள்ளி கி.மு. 87-ல் தோன்றியது இப்போது 28 முறையாகத் தெரிகிறது இம்முறை இது பிரகாசமாக வில்லை; ஆனல் வெயில் கொழுத்துவதற்கு இது தான் காரணம். [கெ]

## கல் எறியாதீர்!!

(சென்னை)

தமிழ்நாடு போக்குவரத்துச் சபைக்குக் கடந்த ஐந்தாண்டுகளில் வன்முறையாளர்கள் பஸ்களுக்குக்கல்வீசியதால் தமிழ்நாடு போக்குவரத்து சபைக்கு 4 கோடி நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

இத்தகவலை தமிழ்நாடு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. எஸ்.முத்துச்சாமி தெரிவித்தார். [க]

## செய்திகள் தந்த பலன்

[கிளிநொச்சி]

பத்திரிகைகளில் விடுக்கப்பட்ட வேண்டுகோள் பலனளித்துள்ளது.

கிளிநொச்சி அரசினர் ஆஸ்பத்திரியில் நிலவிவந்த டாக்டர்கள் தட்டுப்பாடு பத்திரிகைச் செய்திகள், அறிக்கைகளின் பலனாகவும் ஆஸ்பத்திரி அபிவிருத்திச்சபையின் வேண்டுகோளையடுத்தும் நீங்கியது.

இந்த ஆஸ்பத்திரியில் கடமையாற்ற மாவட்டவைத்திய அதிகாரி உட்பட இருவர் நியமனம் பெற்று வந்துள்ளனர்.

கடந்தவாரம் இவர்களின் நியமனம் இடம்பெற்றது. இதனைத் தொடர்ந்து ஆஸ்பத்திரி சுறுசுறுப்பாக இயங்குகிறது சகல பரிசோதனையும் துரிதகெதியில் நடைபெறுகிறது.

### வெளிவாரி பட்டப் பரீட்சை:

## கொழும்பு சென்ற மாணவர் கிளிநொச்சியுடன்திரும்பினர்

[யாழ்ப்பாணம்]

கொக்காவில் பகுதியில் ஏற்பட்ட பதற்ற நிலையாலும், கிளிநொச்சியில் ஷெல் குண்டுகள் வெடித்ததைத் தொடர்ந்தும் இரு பஸ்களில்சென்ற 102 மாணவர்கள், கிளிநொச்சியிலிருந்து யாழ்ப்பாணம் திரும்பினர்.

இம்மாதம் 5 ம் திகதிகொழும்பில் நடைபெறவுள்ள பரீட்சையில் தோற்றுவதற்காக பேராதனை பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப் படிப்பு மாணவிகள் 80 பேரும், மாணவர்கள் 22 பேரும், நேற்று முன்தினம், இருபஸ்களில், யாழ்நகரிலிருந்து புறப்பட்டனர். இவர்களை பொதுசன தொடர்பு அதிகாரியும், உதவி அரசாங்கஅதிபருமானதிரு ரி. குலசேகரம் கூட்டிச்சென்றார்.

பஸ்வண்டி ஆனையிறவுக்கு காலை 10 மணியளவில் சென்ற போது எதிரிலிருந்து வந்த லொறி சாரதிகள் கிளிநொச்சிக்கு அப்பால செல்ல வேண்டாம் என்று பஸ்சாரதிகளிடம் தெரிவித்தனராம்

இருபஸ்களும் கிளிநொச்சி கச்சேரிக்கு சென்று பின், மேலதிக அரசாங்க அதிபர் திரு. வி. அமிர்தலிங்கமும், பொதுசனதொடர்பு அதிகாரி திரு ரி. குலசேகரமும், கிளிநொச்சி இணைப்பு அதிகாரி திரு ஹெப்ப கடுவாவை சந்தித்து நிலைபற்றி அறிந்து கொண்டனர்.

நண்பகல் 12 மணியளவில் கிளிநொச்சியில் மூன்று 'ஷெல்' குண்டுகள் பலத்த சத்தத்துடன் வெடித்ததைத் தொடர்ந்து, பஸ்ஸிலிருந்த மாணவர் அச்சமடைந்தனர்.

சந்தைக்கு வந்த வியாபாரிகள் நாலாபக்கமும் ஓடினர்கள் வர்த்தக நிலையங்கள் பூட்டப்பட்டன, நகரம் வெறிச்சோடியது.

இருபஸ்களில் சென்றமாணவர்கள் பயணத்தை தொடராமல், யாழ் நகர் திரும்பினர்கள்.

இதேவேளை மூன்று தினங்களுக்கு முன் பஸ்ஸில் சென்ற 64 மாணவர்கள், பம்பலப்பிட்டியை சென்றடைந்து விட்டதாக தகவல் கிடைத்துள்ளது. (க)

### விமானத்தில்குண்டு

## 4 பேர் ஆகாயத்தில் வீசப்பட்டு மரணம்!

ஏதன்ஸ் ஏப் 3

ரோமிலிருந்து ஏதென்ஸ் நோக்கி வந்த அமெரிக்கவிமானமொன்றில் நிகழ்ந்த குண்டு வெடிப்பொன்றில் 4பேர்கொல்லப்பட்டனர். 9 பேர் காயமடைந்தனர்

அமெரிக்காவின் ரி.டபிள்யு ஏ விமானச் சேவை விமானமொன்றே இந்தக் குண்டு வெடிப்புக்குள்ளானது.

கிரேக்கத்தின் தலை நகரான ஏதென்ஸை இந்த விமானம் நெருங்கிக் கொண்டிருந்த வேளையிலேயே இதில் குண்டு வெடிப்பு நிகழ்ந்தது

குண்டு வெடிப்பு நிகழ்ந்த இடத்தில் ஏற்பட்ட துவார மூலாக அவ்விடத்தில் இருந்த 4 பிரயாணிகள் விமானத்துக்கு வெளியே ஆகாயத்தில் வீசப்பட்டுக் கொல்லப்பட்டனர். 9 பேர்காயமடைந்தனர்.

ஆயினும் விமானம் முழுவதும் பாதிப்படைவதற்கு முன்னர் விமானமோட்டிகள் பாதுகாப்பாக ஏதென்ஸ் விமான நிலையத்தில் விமானத்தை இறக்கினர் இதனல் அவ்விமானத்திலிருந்த 120 பயணிகளில் 110 பேர் உயிர் தப்பினர்.

அரபுத் தீவிரவாத அமைப்பொன்று இக் குண்டு வெடிப்புச் சம்பவத்திற்கு உரிமை கோரியுள்ளது அமெரிக்கா அண்மையில் மத்திய தரைக் கடலில் மேற்கொண்ட தாக்குதல் நடவடிக்கைக்குப் பதிலடியாகவே இக்குண்டுத் தாக்குதல் நடாத்தப் பட்டதாக அந்த அமைப்புத் தெரிவித்துள்ளது.

### கடாபி மறுப்பு

இதே வேளை இத்தாக்குதலை லிபிய அதிபர் கேர்ணல் கடாபி மறுத்துள்ளார். இத் தாக்குதலைத் தாம் மேற் கொள்ளவில்லையென்றும் அமெரிக்காவுக்கு எதிராக அப்பாவி மக்கள் மீதோ அல்லது அம்மக்களின் இடங்களிலோ, சாதனங்களிலோ லிபியா தாக்குதல் நடத்தமாட்டாதுஎன்றும் தெரிவித்தார்.

கடந்த ஒரு வருட காலத்தினுள் ரோம்-ஏதென்ஸ் நகரங்களுக்கிடையே இடம் பெற்ற 5 வது விமானச்சேவை சம்பந்தப்பட்ட தாக்குதல் இது வென்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத் தாக்குதல்களில் 3விமானங்களிலும் 2 ஏதென்ஸ் விமான நிலையத்திலும் இடம் பெற்றது குறிப்பிடத்தக்கது. (கி)

## ஒரு நாள் வேலை நிறுத்தம் செய்தனர்

[புலோலி]

வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள தாதிமாருக்கு ஆதரவு தெரிவித்து பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலையில் கடமையாற்றும் சகல தாதிமாரும் ஒருநாள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர்

இவ் வைத்தியசாலை தாதிகள் கடந்த வியாழக்கிழமை மேற்படி அடையாள வேலை நிறுத்தத்தை மேற்கொண்டனர்.

## நாளை மைதான அடிக்கல் நாட்டு விழா

[யாழ்ப்பாணம்]

திருநெல்வேலி செங்குந்த இந்துக் கல்லூரி விளையாட்டு மைதானத்திற்கான அடிக்கல் நாட்டுவிழா நாளை சனிக்கிழமை காலை ஒன்பது மணிக்கு நடைபெறவுள்ளது கல்லூரி அதிபர் திரு ம. சண்முகலிங்கம் தலைமையில் விழா நடைபெறும்.

இவ் வைபவத்தையடுத்து கல்லூரி மாணவர்களுக்கும் பழைய மாணவர்களுக்குமிடையே கிரிக்கட் போட்டி நடைபெறும்.

## இனப் படுகொலைகள்: முல்லை மக்கள் அறிக்கை!

[யாழ்ப்பாணம்]

''ஒதியமலை, பட்டிக்குடியிருப்பு காட்டுப்பூவரசன் குளம் நாவலர் பண்ணை, கொக்குத்தொடுவாய், கொக்கிளாய், குமிழமுனை ஆகிய எமது பிரதேசத்தில் நீங்கள் ஆடிய வெறியாட்டத்தில் எமது மக்கள் முந்நூற்றுக்கும் மேற்பட்டோரை படுகொலை செய்தது நீங்களே! அவர்களுக்குப் பயங்கரவாதிகள் எனப் பட்டம்சூட்டியதும்நீங்களே!''

இவ்வாறு ''அடக்குமுறையை எதிர்க்கும் முல்லைத் தீவு மக்களின் கடும் ஆட்சேபம்'' என்ற தலைப்பிட்டு முல்லைத்தீவுவாழ் மக்கள்வெளியிட்டுள்ள துண்டுப் பிரசுரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்தமாதம் 27 ந் திகதி வெளியிடப்பட்ட இப்பிரசுரத்தில்: ''எமது மீனவர்களின் ஜீவனோபாயத்திற்கு ஆதாரமாயிருந்த படகுகளை எரித்தும், கடலில் மீன்பிடிக்கத் தடை விதித்து அவர்களைப் பட்டினிக்குள்ளாக்கியதும், அவர்களைச் சுட்டுக்கொன்றதும் நீங்களே!

''பாரம்பரியமாக எமது மக்கள் வாழ்ந்த எமது பிரதேசத்தை விட்டு வெளியேற்றி ஆருயிரத்துக்கு மேற்பட்ட மக்களை அகதிமுகாமில்வாழும் அவலத்தை ஏற்படுத்தியவர் நீங்களே! இன்று அகதிமுகாமில் வாழும் மக்களின் குழந்தைகளின் கல்வி, சுகாதாரம் முதலிய அடிப்படை வசதிகள் பாதிக்கப்படக் காரணம் நீங்களே! இம்மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளைச் செய்து அவர்களைப் பராமரிப்பது எமது இளைஞர்களே எமது இளைஞர்களில் சில புல்லுருவிகள் இருக்கலாம். அவர்களால் எமக்கு சில சிரமங்கள் ஏற்பட்டிருக்கலாம். அவற்றைகளைந்தெறிந்து சரியானமுறையில் அவர்களை நெறிப்படுத்த எம்மால் நிச்சயம் முடியுமென நம்புகின்றோம்'' எனவும் குறிப்பிட்டுள்ளது. [ஐ]

### மணிவாக்கு

ஈசனே! சூரிய சந்திரர்களைப் போல நாங்களும் நியமத்துடன் உலகிற்கு நன்மைதரும் நன்னெறியில் முன்னேற அருள் புரிவாயாக.

— இருக்குவேதம்

## நமது நோக்கு

# இனப்பிரச்னையில் இறை நம்பிக்கை

உலகம் முழுவதுமே நல்லதும் கெட்டதுமான சம்பவங்கள் நடந்து கொண்டுதான் இருக்கின்றன. நல்ல விடயங்கள் பரபரப்பை ஏற்படுத்துவதுமில்லை. பரபரப்பில்லாதவை பகிரங்கமாவதும் இல்லை.

சிறுவிடயமானாலும் மனிதனை பரபரப்பில் ஆழ்த்தி அதன்மூலம் விற்பனையை அதிகரிக்க முயல்வது. நவகால பத்திரிகா தர்மமாகி வருகின்றது.

மலையகத்தில் சர்வோதய இயக்கத்தினர் கடந்த மாதம் 25-ம் திகதி அட்டனிலிருந்து சிவனொளிபாத மலைக்கு பாத யாத்திரை ஒன்றை நடத்தினார்கள். அதேபோன்று உலக சேம நலத்தை வேண்டி யாழ்ப்பாணத்தில் அப்பர் சுவாமிகளின் திருஉருவம் மிகுந்த பக்தி சிரத்தையுடன் பல இடங்களுக்கும் பவனியாக எடுத்துச்செல்லப்பட்டு தற்பொழுது நல்லூர் ஆதீனத்தில் வைக்கப்பட்டுள்ளது. புதுவருடத்தையடுத்து அப்பர் சுவாமிகளின் திருஉருவம் மீண்டும் பவனியாகப் புறப்பட்டு திருக்கேதீச்சரம் சென்றடையும்.

நாட்டில் இன்று தோன்றியுள்ள நிலைமைக்கு பலரும் பலவிதமான தீர்வுகளைப் பற்றிப் பேசியும், விவாதித்தும் வரும் வேளையில், தெய்வ நம்பிக்கை மிகுந்த ஒரு பெரும் பகுதியினர், அமைதித் தீர்வு ஏற்பட வேண்டும் என்பதற்காக இறை அருளை வேண்டி நிற்கிறார்கள் என்பதை யாரும் மறுப்பதற்கில்லை. அவர்கள் கோயில்களில் பூஜைகள், வேள்விகள், யாகங்கள் முதலியவற்றையும், தேவாலயங்களில் பலிப் பூசைகள், பிரார்த்தனை ஜெபங்களையும், மசூதிகளில்தொழுகைகளையும் நடத்தி இம் மண்ணில் அமைதி நிலவ வேண்டுமென இறைவனிடம் இறைஞ்சுகிறார்கள்.

அனாதி காலமாக நமது சமுதாயம் தெய்வத்தில் அதி நம்பிக்கைகொண்டு வாழ்ந்து வருகின்றது. இறைவன் திருவருளின்றி எதுவும் சித்திக்காது என்பது அவர்களின் துணிபு. இந்த நம்பிக்கை அவர்களின் ஊனிலும் உயிரிலும் இரண்டறக் கலந்து விட்டமையால்தான் இன்று உலகாயதம் பேசும் பரம்பரையினராலும் கூட சமயச் சடங்குகளைப் புறக்கணிக்கமுடியாமல் இருக்கின்றது.

எனவே தமிழ் மக்கள் இன்று எதிர்நோக்கி நிற்கும் ஜீவாதாரப் பிரச்னையில் ஒரு பிரிவினர் ஆயுதம் ஏந்திநிற்கும் அதேவேளையில் இன்னொரு பிரிவினர் தமக்கேயுரித்தான சமய சம்பிரதாய முறைகளில் நீதிக்காக இறைவனிடம் கையேந்தி நிற்கிறார்கள். இறைவன் மனம் வைத்தால் இனப்பிரச்னை மிகஎளிதாக, எவரும் எதிர்பாராத விதமாக, ஆச்சரியமான முறையில் தீர்ந்துவிடுமென்று அவர்கள் நம்புகிறார்கள்.

# வானிலிருந்து திராவக வீச்சு

ஆகாயத் தாக்குதல்களை அரசு நிறுத்திவிட்டதாக அறிவித்துள்ள போதிலும், ஹெலிகொப்டர்கள் மூலம் குண்டுகளை வீசுவவதும், துப்பாக்கிப்பிரயோகம் செய்வதும் தொடர்ந்தும் நடைபெற்று வருகின்றன. காங்கேசன்துறை, பலாலி, வல்வெட்டித்துறை, பருத்தித்துறைப் பகுதிகளில் தொடர்ந்து நடைபெற்று வரும் சம்பவங்கள் மிகுந்த கவலையளிப்பனவாகவுள்ளன

ஆயுதப்படையினர் மீது போராளிகள் தாக்குதல் நடத்துகிறார்கள்- தாக்குதல் நடத்தத் திட்டமிட்டுள்ளார்கள் என்ற போர்வையில் அப்பாவி மக்கள் மீது நடத்தப்படும் ஈவிரக்கமற்ற தாக்குதல்கள் அதிகரித்துள்ளன.

பீரங்கிக் குண்டுகள், மோட்டார் குண்டுகள், ஷெல் குண்டுகள், எறிகுண்டுகள் என பலரகப்பட்ட ஆயுதங்கள் ஏவப்படுகின்றன. இவைகளால் பாதிப்படையும் மக்கள் அதுபற்றி கதைகதையாகக் கூறுகிறார்கள்.

குறிப்பிட்ட இடங்களிலிருந்து குடும்பம் குடும்பமாக வெளியேறிக் கொண்டிருக்கிறார்கள்.

கடைசியாக நடத்தப்பட்டுள்ள தாக்குதல் ஒன்றில் இரசாயனப் பொருள் ஒன்று (திராவகம்) ஹெலிகொப்டரிலிருந்து ஊற்றப்பட்டதாகக் கூறப்படுகின்றது. அச்சம்பவத்தில் எரிகாயங்களுக்குள்ளான ஒருவர் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இது ஆகாய விமானத் தாக்குதலை விட மோசமான காரியம் என்றே நாம் கருதுகின்றோம். இது தொடருமானால் சாதாரண பொதுமக்கள், இளஞ்சிறார்கள், வயோதிபர்கள், பெண்கள் போன்றோர் பெரிதும் பாதிக்கப்படுவர்.

போராளிகளுடன் போரை அரசு நடத்திக் கொள்ளட்டும், பொதுமக்களை பணயப் பொருளாகப் பாவிப்பதை உடனடியாக நிறுத்துவதற்கு வழிகண்டு பிடிப்பது பொறுப்புள்ள அரசின் கடமை

# தேசிய ஆங்கிலத் தராதரப் பரீட்சையில் இனப்பாகுபாடு?

தேசிய ஆங்கிலத் தராதரப் பத்திரப் பரீட்சை கடந்த மாசி மாதம் 15ம் திகதி யாழ்ப்பாணக் குடாநாட்டிலும் பலவிடங்களில் நடாத்தப்பட்டது. ஏராளமான தமிழ் மாணவர்கள் இதற்குத் தோன்றியிருந்தார்கள் இப் பரீட்சைக்கு விண்ணப்பக்கட்டணமும் ரூபா 100 ஒவ்வொரு பரீட்சார்த்தியிடமும் இருந்து அறவிடப்பட்டது. இதுவரை காலமும் இலங்கையில் இலங்கைக் கல்வித்திணைக்களத்தினரால் நடாத்தப்படும் தனி ஒரு பாடத்திற்கு இவ்வளவு தொகை அறவிடப்பட்டது கிடையாது. பரீட்சையை பற்றிய விளக்கக் கைநூல் ஒன்றும் அரச அச்சகத்தில் அச்சாக்கப்பெற்று ஒரு பிரதி ரூபா ஐம்பது என விற்கப்பட்டது. மேலும் இப் பரீட்சையைப் பற்றி அதிகளவில் விளம்பரங்களும் முக்கியத்துவங்களும் இருந்தமையால் தமிழ் மொழி பேசும் மாணவர்களும் இலங்கையிலும், உலகளாவியரீதியிலும் தங்களுக்கு வேலைவாய்ப்புக்கு அல்லது கல்வி கற்பதற்கு இத் தராதரப் பரீட்சை உறுதுணையாக இருக்கும் என நம்பி இப் பரீட்சைக்கு விண்ணப்பம் அனுப்பினர். சென்ற வருடம் கார்த்திகை மாதம் நடைபெற விருந்த இப் பரீட்சை பிற்போடப்பட்டு இவ்வருடம் மாசி மாதம் 15ம் திகதி நடைபெற்றது. பரீட்சை விண்ணப்பப்பணம் தொகை கூடியதாக இருந்தால் இப்பரீட்சைக்கு மாணவர்களை ஆயத்தம் செய்த தனியார் நிறுவனங்களும் மாணவர்களிடம் கூடிய கட்டணத்தை அறவிடும் நிலைக்குத் தள்ளப்பட்டனர். இப்படியாக பல கஷ்டமான சூழ்நிலையில் தமிழ்மாணவர்கள் படித்து பரீட்சைக்குச் சமூகமளித்துள்ளார்கள்இன்று இவர்களது நிலை என்ன?

'ஐலன்'பத்திரிகையின் மார்ச் 7ம் திகதி இதழில் இடம் பெற்ற ஆசிரியருக்குக் கடிதம் பகுதியில் பாணந்துறை வாசியான டபிள்யு.டி அபயகுணரட்ண எனும் பெற்றோர் பின்வரும் விபரங்களைப் பகிரங்கப்படுத்தி உள்ளார் அதாவது 5'00 த்துக்கு மேற்பட்ட சிங்கள மொழி பேசும் மாணவர்ள் சென்ற ஆண்டு மாவட்ட ஆங்கில மத்திய வருட பரீட்சைக்குத் தோற்றி உள்ளனர். (District English Language Centre Mid Year Exam) இப் பரீட்சை தேர்ந்தெடுத்த 19 சிங்கள மாவட்டங்களில் நடாத்தப்பட்டது. இப்பரீட்சையின் ஆங்கில வினாத்தாளில் இருந்து3 வினாக்கள் சிறிதளவு மாற்றத்திற்கு கூட உட்படாது. அப்படியே சென்ற மாசிமாதம் அகில இலங்கை ரீதியில் நடந்த தேசிய ஆங்கில தராதரப் பத்திர வினாத்தாளில்வந்துள்ளது. அதாவது மாவட்ட வினாத்தாளில் இருந்து 5ம், 7ம், 9ம் கேள்விகள் தேசிய ஆங்கில தராதர வினாத்தாளில் 4ம்,8ம் 10ம் வினாக்களாக அமைந்துள்ளன. மேலும் Thursday 13 th of March Island பத்திரிகையில் களனியாறை சேர்ந்த திரு எஸ். டி. மெல் என்பவர் இத் தேசிய ஆங்கில தராதரப் பரீட்சை வினாத்தாள் திருத்தும் பணி நிறுத்தப்பட்டு ஓர் தனிப்பட்ட அரசாங்க விசாரணைக் குழு மூலம் இக்குளறுபடி விசாரிக்கப்படல் வேண்டும் எனக்கோரி உள்ளார். மேலும் அவரது கருத்துப்படி கல்வித் திணைக்களப் கண்மூடித்தனமாக PHD எழுத வந்த ஓர் ஆங்கில வெளியாருக்கு உதவி செய்யும் நோக்குடன் இப் பரீட்சைஆரம்பிக்கப்பட்டுள்ளதாகசாடுகிறார் ஏன்எனில் இப் பரீட்சையில் கேள்விக்கொத்து (Questionaire) ஒன்று கொடுக்கப்பட்டு பல தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளது உலகில் ஓர் இடத்திலும் இப்படி நடந்தது இல்லை. மாணவர்களது பரீட்சை வினாக்கட்டு சிந்திக்கும் நேரத்தை இது குறுக்கீடு செய்துள்ளது. மேலும் இவ்வாறான ஓர் கேள்விக் கொத்தின் மூலம் சுட்டெண்ணிற்குரிய மறைத்து வைத்திருக்கும் தன்மைகளான பாடசாலைகளின் தரம் / எம் மொழி பேசுபவன்? போன்ற தனித்துவங்கள் பகிரங்கப் படுத்துவதாக அமைகிறது.

மேற்கூறிய இருவரது கருத்துக்களையும் ஆராயும் இடத்து

**எஸ். பி. ஐயர்**

இத்தேசிய தராதர ஆங்கில பரீட்சை தேசியத் தன்மை அற்றதாகவும் சிங்கள மொழி பேசும் மாணவர்கட்கே முன்னுரிமை அளிப்பதாகவும் அமைந்துள்ளது. தமிழ் மொழி பேசும் மாணவர்கள் வஞ்சிக்கப்பட்டுள்ளனர் இதனை கேட்போர் யார்?

பலவின பல மொழி பேசும் நாடுகளில் எல்லாம் கல்வி, கலாசார வளர்ச்சி அவ்வவ்வின மொழி வாரி மாகாண நிர்வாகத்திலுள்ளது. ஆனல் எம்நிலைஎன்னசிங்களகலாசார சூழல் சார்ந்த பாடப் புத்தகங்கள் மட்டும் அகில கல்வித் திணைக்களம் நடாத்தும் பொதுப் பரீட்சை முறையும் அவர்கள் சார்பாகவே இருக்கிறது. இதற்கு மாற்றுவழிஏதாவது உண்டா? ஆங்கில கல்வியினைப் பொறுத்தவரை இலங்கையரசால் நடாத்தப்படும் தேசிய ஆங்கிலத் தராதரப் பத்திரப் பரீட்சைக்கு தோன்றாது உலகளாவிய ரீதியில் ஒவ்வோர் ஆண்டும் 6 தடவைகள் நடாத்தப்படும் ''TOEFL'' பரீட்சை எடுப்பது சாலச் சிறந்தது என்பது என் தனிப்பட்ட கருத்து. ஏனெனில் அபிவிருத்தி குன்றிய நாடுகட்கு கல்வி ரீதியில், வேலை வாய்ப்புரீதியில் உதவ விடுத்துள்ள தேர்வே, சுவீடன் போன்ற நாடுகளும் TOEFL பரீட்சைப்பெறுபேறுகளையே அதிக அளவில் நாடுகின்றன. தேசிய ஆங்கில தராதரப் பரீட்சை இன்னும் உலகளாவிய ரீதியில் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. எனபதையும் கருத்திற் கொள்ள வேண்டும்.

# மானிப்பாய் தந்த முதலியார் மகேசன்



சென்றபத்தொன்பதாம் நூற்றாண்டிலும் நடைபெறும் 20ம் நூற்றாண்டிலும் மானிப்பாய் பட்டினம் பலபெரியார்களைத்தமிழினத்துக்கீய்ந்தது. இவருள்அனேகர்கொழும்பில், கறுவாக்காடு என்று சிறப்பாக அழைக்கப்பட்டு வந்த, செல்வந்தர் குடியேற்றப்பகுதியில் வசித்து இலங்கை முழுவதுக்கும்பேரும் புகழும் ஈட்டிக் கொடுத்தார்கள். கறுவாக்காட்டில் குடியேறாமல் மானிப்பாயாகிய தன் சொந்தஊரிலே இருந்துகொண்டே கறுவாக்காட்டாருடன் சமமாக மதிக்கப்படக்கூடிய வகையில் ஈழவள நாட்டுக்கும், சிறப்பாக மானிப்பாய்க் கோயிற்பற்றுக்கும் வளமும் புகழுந் தேடித் தந்தவர் முதலியார் மகேசனெனில் மிகையாகாது. கண்ணியமாக, ஆடம்பரமற்ற வாழ்க்கையிலமர்ந்துகொண்டு தன் செல்வத்தை சமய, சமூக பொதுத்தருமங்களுக்கு வாரி வழங்கிவந்த வள்ளல் அவர். தனிப்பட்ட மனிதரும் குடும்பங்களும், ஸ்தாபனங்களும் அவரையண்டி முன்னேறியவை கணக்கற்றவை. இலங்கை அரசு அவருக்கு முதலியார், ஜே. பி. முதலிய பட்டங்களைக் கொடுத்துக் கௌரவித்தது. ஏழைகள் அவரைஅண்டிப்பிழைத்து வள்ளல் எனப்போற்றினார்கள். தருமங்களைவிருத்திசெய்ய விரும்பினவர்கள் அவருடைய தலைமையை நாடினர். அவருடைய 76 ஆண்டு உலக வாழ்க்கையில் கடைசிப் பத்தாண்டுச் சரித்திரம் பொன்னெழுத்தில் பொறிக்கப்படவேண்டியது. வாழ்க்கை நிலையில்லாதது. எப்போ முடிவுவருமெனக் கணிக்கமுடியாதது. ''புல்நுனிமேல் நீர்போல யாக்கை நிலையாமைஎன்றெண்ணி இன்னினியே செய்க அறவினை'' என்ற ஜைனமுனிவர் வாக்கையுணர்ந்தவர்போல, உடல்நிலை தளரத்தொடங்க முதலியார் அவர்களும் தீவிரமாகத் தருமங்களில் ஈடுபடத்தொடங்கினார். 1956ல் மானிப்பாயில் ஆரம்பிக்கப்பட்ட இந்துசமய விருத்திச் சங்கத்தின்தலைமைப் பதவியை 1981ம் ஆண்டு தானே ஏற்றார். சங்கத்தின் சமயப்பணிகளை விரிவடையச் செய்தார். மானிப்பாய் கோயிற்பற்றிலுள்ள மானிப்பாய், நவாலி, ஆனைக்கோட்டை, சுதுமலை, சண்டிலிப்பாய் ஆகிய ஐந்து கிராமங்களிலும் தனித்தனி ஐந்து கிளைச்சங்கங்கள் உற்பத்தியாயின. நாலுபக்கங்களிலும் ஒளியை வீசிக்கொண்டு உயர்ந்துநின்று பரந்த கடலில் ஊசலாடும் மரக்கலங்களுக்கு வழிகாட்டும் கலங்கரை விளக்கம்போல, முதலியார் மகேசன் நடுநாயகமாக நின்று சைவசமயத்தைப் பலதுறைகளிலும் வளர்த்தார். ஊர்மக்கள் அவர்பின் அணியில் ஒன்று சேர்ந்துஉழைத்தார்கள். சமய பாட வகுப்புகள், நாயன்மார் குருபூசைகள், திருமுறை பண்ணிசை வகுப்புக்கள் இன்னோரன்ன பல திறப்பட்ட சைவப் பணிகள் மலர்ந்தன தகைமை வாய்ந்த பண்ணிசை ஆசிரியர்களின் கீழ் ஊர்கள்தோறும் நூற்றுக்கு மேற்பட்ட பிள்ளைகள் முறைப்படி வடஇலங்கை சங்கீத சபையின் ஆறாண்டுத் திட்டத்திற்கமைய பண்ணிசை கற்று ஆறுவதாண்டுப் பரீட்சையின் தெரிவின்மூலம் பண்ணிசை ஆசிரியர்களாகவரும் வாய்ப்பைப்பெற்றார்கள். ஒவ்வொரு சனி, ஞாயிற்றுக் கிழமைகளிலும் ஊர்களெல்லாம் பண்ணிசை ஒலித்தது. அவ்வளவில் முதலியார் மகேசன் திருப்தியடைந்துவிடவில்லை. இத்தனைக்கும் நிரந்தர

(5ம் பக்கம் பார்க்க)

## இன்று

[யாழ்ப்பாணம்]

யாழ். சாந்தையர் மடம் ஸ்ரீ கற்பகவிநாயகர் கோவிலில் பல நாட்களாக நடைபெற்றுவரும் கந்தபுராண படனத்தில் இன்று சூரபன்மன் வதைப்படலம் படிககப்படும். காலை 7 மணி முதல் மாலை 5 மணி வரை முழுநாள் நிகழ்ச்சியாக இது நடைபெறும்,

## மானிப்பாய்...

(4ம் பக்கத் தொடர்ச்சி)

பொருள் வருவாய் வேண்டும் என்பது அவருக்குத் தெரியாததல்ல. ஆயிரம் ஆயிம் ரூபாய் வீதம் சமயப்பற்றுள்ள தனவந்தர்களிடம் நிதி திரட்டினார். சேர்ந்த நிதியை முதலீடு செய்து அதன் வட்டி வருமானத்தைக் கொண்டு மானிப்பாய் கோயில்பற்று உள்ளடக்கிய ஐந்து ஊர்களிலும் சமயப் பணிகளை இயன்றளவு ஊக்குவிக்கத் தன் உடல், பொருள் ஆவியாவற்றையும் அர்ப்பணித்தார்.

ஒருஅனாதைப்பிள்ளைகள்இல்லம் நிறுவவேண்டும் என அவரின் இயல்பான தருமசிந்தனை அவரின் வயோதிப காலத்தில் அவர் முன்குறித்த தர்மகர்த்தாக்கள் சபையுடன் கலந்து ஆலோசித்து அவர்களின் உத்தரவுடன் 100 சிறுகளுக்கு வாழ்வளிக்கக்கூடிய ஒரு பெரிய இல்லத்தை மூன்று மாத காலத்துக்குள் திடீர்திடீரெனத் தயார் செய்து 1986ம் ஆண்டுத் தைப்பூசத் திருநாளன்று திறப்பு விழாவும் நடத்தி, தருமகர்த்தாக்கள் சபையில் ஒப்படைத்துவிட்டுச் சென்று படுத்துவிட்டார் கடைசி மூச்சு வரையும் முதலியார் மகேசன் பன்னிப்பன்னிப் பேசின யாவும் ''மகேஸ்வர இல்லம்'' என்னும் அனாதைப் பிள்ளைகள் இல்லத்தைப் பற்றியனவேதான்.

முதலியார் மகேசன் ஒரு பற்றற்ற தருமவான். தருமதேவன் அவரை அழைத்துச் சென்று வானுலகில் ஒப்படைப்பான் என்பது திண்ணம்.

மு. வைரமுத்து.

## தவறிவிட்டது

இன்று (3-4-86) காலை 9-15 மணிக்கும் காலை 10 மணிக்குமிடையில் கொக்குவில் தபாற்கந்தோர் வெளிவிறுந்தையில் பச்சைநிற கேசுடன் காதொலிக்கருவி (Behind the ear Hearing aid) ஒன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர் சுதுமலை வடக்கில் வசிக்கும் சி. தர்மலிங்கத்திடம் ஒப்படைத்தால் சன்மானம் வழங்கப்படும். (C 1578)

**எம்பயர் திரையில்**
10-30, 2-30, 6-30,
கார்த்திக் - கவுண்டமணி
**தர்மபத்தினி**

**LIDO Jaffna**
10-30, 2-30, 6-30
கமல்-ஸ்ரீதேவி-ரஜனி
**16 வயதினிலே**
புதிய பிரதி (கலர்)

5வது வாரம்
**வெலிங்டன்**
10-30, 2-30, 6-15
சிவகுமார், மோகன்
அம்பிகா கவுண்டமணி
நடித்த
**நான் பாடும் பாடல்**
(கலர்)

## புனித இயக்கங்களுக்கு ஓர் வேண்டுகோள்

இருபத்திஐந்து வருடங்களாக பல தொழில் அதிபர்களையும் மின்சாரமோட்டார் வல்லுநர்களையும் உருவாக்கிய ஸ்தாபனம் விக்ரர் அன் சன்ஸ்.

இன்று இவ் ஸ்தாபனத்தில் நடந்த கொள்ளையின் நிமித்தம் 25க்கு மேற்பட்ட ஆண், பெண் தொழிலாளர்கள் வேலை இழக்கும் நிலையில் உள்ளார்கள். ஆகவே புனித இயக்கங்கள் இதில் தலையிட்டு களவுபோன பொருள்களை மீட்டுத்தரும்படி வேண்டுகின்றோம்.

**விக்ரர் அன் சன்ஸ்**

ஸ்தாபன ஊழியர்களும், உரிமையாளரும்.

C - 1585

## கண்ணீர் அஞ்சலி

சண்டிலிப்பாய் டச் வீதியைச் சேர்ந்த இளைப்பாறிய பொலீஸ் உத்தியோகத்தரும், வில்லியம்ஸ் பிஸ்கட் கொம்பனியின் பிரதிநிதியும் புஸ்பராணியின் அன்புக் கணவரும், றேய் விஜயராஜா (குவைத்), ரஞ்சித் செல்வராஜா (குவைத்), விஜயராணி (மஹாராஜாஸ், கொழும்பு), செல்வராணி ஆகியோரின் அருமைத் தந்தையுமான C D. விஜயறட்ணம் 30-03-86 அன்று மறுமைக்குள் எய்திய செய்திகேட்டு ஆறாத்துயரும் ஆழ்ந்தகவலையும் அடைகின்றோம். அன்னாரின் நல்லடக்க ஆராதனையில் கலந்து கொள்ள முடியாததையிட்டு மிகவும் வேதனையடைகின்றோம். அன்னாரின் ஆன்மா கர்த்தருக்குள் ஆறுதலடைய இறைவனை வேண்டுகிறோம்.

இப்படிக்கு
அன்பு மறவா நண்பர்கள்
வி. சூரியகுமார், சந்திரகுமார்,
ஏனைய ஊழியர்கள்.

சரஸ்வதி ஸ்ரோஸ்
12, ஆட்டுப்பட்டித் தெரு,
கொழும்பு - 11.

C 1594

## 2- வது ஆண்டு நினைவஞ்சலி



நமசிவாயம் சிவபாலன்

ஆண்டவன் படைப்பு:
18- 10- 1962

ஆழ்பவன் அழிப்பு:
11- 4- 1984

அன்புவழி காட்டி ஆதரவு நல்கி இங்கிதமாய் பேசி ஈடின்றி வாழ்ந்து திடீரென எங்களை விட்டுப் பிரிந்து இரண்டு ஆண்டுகள் சென்றாலும் உங்கள் நினைவு எங்கள் நெஞ்சங்களை விட்டு அகலாது. அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடைய 4- 4- 86 இல் 2/5, விதானையார் வீதி. ஈச்சமோட்டையில் இருக்கும் அன்னரது இல்லத்தில் பிரார்த்திக்கின்றோம், இனிய நண்பர்கள், உறவினர், உறவினர் அனைவரையும் அன்புடன் பிரார்த்தனை செய்ய வேண்டுகிறோம்.

இங்ஙனம்;
அப்பா, அம்மா,
அக்காமார்,
சுண்டிக்குழி,
ஈச்சமோட்டை,
யாழ்ப்பாணம்.

(C1584)

## யாழ்தேவி...

(1ம்-பக்கத் தொடர்ச்சி

அமைச்சின் உயர்மட்டத்தில் ஆலோசிக்கப் பட்டுவருகிறது.

இதேவேளை தற்போது பாவனையிலுள்ள புகையிரத என்ஜின்கள் யாழ் சேவைக்கு பயனபடுத்தப்படமாட்டாதென்றும் இதற்கென அமைக்கப்படவுள்ள 'என்ஜின்' இறக்குமதியானபின்பே இச்சேவை விடயம் குறித்து மேலதிக ஆலோசனைகள் நடைபெறவுள்ளன என்றும் இப்புதிய என்ஜினைக் கொள்வனவு செய்ய ஏறத்தாழ 4½ கோடி ரூபா செலவாகுமென்றும் மேலும் தெரியவருகின்றது. (பி)

## காணமல்போய்விட்டார்



புங்குடுதீவு 2ம் வட்டாரத்தைச் சேர்ந்த சண்முகம் மகள் பரமேஸ்வரி (39வயது) சுமார் 5 அடி உயரமான இவரை 1-4-86 தொடக்கம் காணவில்லை. இவர் ஒரு மனநோயாளி. காணமற்போனபோது சட்டையும் வெள்ளைப் பாவாடையும் அணிந்திருந்தார். இவரைக் கண்டுபிடித்துத் தருபவருக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

தொடர்பு:
ச. முத்தம்மா
2ம் வட்டாரம. புங்குடுதீவு.

(C 1592)

## கொக்காவில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தலைப்புலிகள் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

''நேற்றுமுன் தினம் காலை 7-30 மணியளவில் மாங்குளத்திலிருந்து ஏழுமைல்கள் அப்பாலும் கொக்காவிலிற்கு மூன்று மைல்கள் முன்னதுமான பதினெட்டாம் போர் என்னுமிடத்தில் 34 வாகனங்களிலும், நடந்தும் வந்தஇராணுவத்தினர் மீது எமது வீரர்கள் பலமான நேரடி மோதல் ஒன்றை நிகழ்த்தினர். முன்னதாகவந்த லொறி ஒன்று சண்ணிவெடியால் சிதறியது. பீங்கி பொருத்கப்பட்ட சலாடின் ஆமட்கார் ஒன்றும், ஒரு லொறியும் தொடர்ந்த ஆர் பி. ஜி தாக்குதலில் முற்றாக சேதமடைந்தன.

இத்தாக்குதலில் ஒரு லெப்டினன்ட் உட்பட 25 இராணுவத்தினர் பலியாயினர், இன்னொரு லெப்டினட் உட்படப் பலர் காயமடைந்தனர். பல நவீனரக தன்னியக்கத்துப்பாக்கிகள், ரவைக்கூடுகள், தோட்டாக்கள் ஆகியன எம்மால் கைப்பற்றப்பட்டன.

மூன்றுமணி நேரமாகப் பலமாக நடந்த இந்த நேரடி மோதலில் வதனன், டெஞ்சமின், ஜோன், மோகன் ஆகிய நான்கு வீரவேங்கைகளும் களப்பலியடைந்தனர். அவர்களுக்கு எமது அஞ்சலியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.மா

## ''உண்மையான..

(1ம் பக்கத்தொடாச்சி)

விருத்திஅமைச்சர் திரு காமினி திஸநாயக்காமேற்கண்டவாது கூறினார்.

''அரச அதிபர்கள் மாவட்டங்களின் சிரேஷ்ட 'தளபதி'கள் ஆனல் வடக்கிலும், கிழக்கிலும் நிர்வாகத்துக்கு இன்று ஏற்பட்டுள்ள பயங்கரமான அச்சுறுத்தல் நாட்டின் இதர மாவட்டங்களையும் வெகுவாகப் பாதித்துள்ளதுஎன்றுதெரிவித்த அமைச்சர் தமிழர் பிரச்னைக்கான அரசியல் தீர்வு பற்றிப் பிரஸ்தாபிக்கையில் குறிப்பிட்டதாவது;

### வடக்கு, கிழக்கில் 12 வீதம் காணி தமிழருக்கு

''இனரீதியில் காணிகளைப் பங்கீடு செய்வதே எமது அரசின் கொள்கையாகும். இதன் பிரகாரம் வடக்கு, கிழக்குப் பகுதிகளிலுள்ள காணியில் 12 சதவீதத்தை தமிழருக்கு வழங்க முடியும். அதிகாரப் பரவலாக்கத்தில், தமிழ் மக்களுக்குப் பொலிஸ் அதிகாரங்களை மட்டுமே வழங்க முடியும்.'' [ஷ]

## கொள்ளையை...

( 1-ம் பக்கத் தொடர்ச்சி)

யாழ் வர்த்தகர் சங்கம் அனைத்து வர்த்தகர்களையும் கோரியுள்ளது

இக்கடையடைப்பு தொடர்பாக யாழ் வர்த்தகர் சங்கம் விடுத்துள்ள பிரசுரமொன்றில் குறிப்பிட்டிருப்பதாவது:

''இந்தக் கொள்ளைகள் நாளை உங்களுக்கும் ஏற்படலாம். இச்செயலை வன்மையாக கண்டித்து 4-4-86 வெள்ளிக்கிழமை உங்கள் வர்த்தக நிலையங்களைப் பூட்டி எமக்குப் பூரண ஆதரவு வழங்கி உங்கள் எதிர்ப்பைத் தெரிவிக்குமாறு யாழ் வர்த்தகர் சங்கம் சார்பாக வேண்டுகிறோம்''.

இக்கடையடைப்பு சம்பந்தமாகப் போதியளவு முன்னறிவித்தல் கொடுக்கப்படாமையினால் வர்த்தகர்களுக்கு ஏற்பட்ட அசௌரியங்களையிட்டு தாம் வருந்துவதாக வர்த்தகர் சங்கச்செயலாளர் திரு சி. நமசிவாயம் 'ஈழநாடு'க்குத் தெரிவித்தார். (க)

## அநுதாபம்

விக்ரர் அன்சன்ஸ் ஸ்தாபன தொழில் உபகரணங்கள் களவு போனதின் நிமித்தம் கஷ்டமுறும் ஸ்தாபன ஊழியர்களுக்கு எங்கள் அநுதாபத்தை தெரிவித்துக் கொள்கிறோம்.

(1) வண். வீரமாகாளி அம்மன் தேவஸ்தான ந. சண்முகரட்ணஐயர்

(2) பொன்னாலை வரதராஜப்பெருமாள் தேவஸ்தான பிரதமகுருக்கள்.

(C 1580)

## டென்மார்க் பயணம்

உடனடியாக டென்மார்க் செல்வதற்கு தொடர்பு கொள்ளவும்.

**AIR-TRANSIT**

538, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

FREIGHT AND TRAVELS LANKA LTD;
307, Galle Road, Colpetty, Colombo-3 T.P.: 573609

[C-1588]

# உதைபந்தாட்ட வளர்ச்சிக்கு டாக்டர் பிலிப்பின் பங்களிப்பு

## விளையாட்டுக் கழகங்கள் ஒன்றிணைந்து பாராட்டு

(யாழ்ப்பாணம்)

''உதைபந்தாட்டத்தின் வளர்ச்சிக்கு அயராது உழைத்துவருபவர் டாக்டர் பிலிப் அவருடைய விடாமுயற்சியினுல்தான் யாழ். மாவட்டத்தின் இக்கட்டான இக்காலகட்டத்திலும் உதைபந்தாட்டப் போட்டிகள் நடைபெற்றுவருகின்றன''.

இவ்வாறு யாழ். உதைபந்தாட்ட லீக்கின் போட்டிக்குழு தலைவர் திரு. சற் சிங்கராயர் மேற்படி லீக்கின் தலைவர் டாக்டர் ஜே. பி. ஸி. பிலிப் தம்பதிகளுக்கு சகல விளையாட்டுக்கழகங்களும் ஒன்றிணைந்து அளித்த மதிய விருந்து வைபவத்தில் கூறினுர்.

இவ்வைபவத்தில் யாழ். உதைபந்தாட்ட லீக்கின் காரியதரிசி திரு. ஈ. கே. குமரையா பேசுகையில்: ''நீண்டகாலமாக எமது லீக்கின் தலைமைப்பதவியை மிகத்திறம்பட நிர்வகித்துவரும் டாக்டர் பிலிப் அவர்களை யாழ். நகர் மக்கள் பாராட்டுகிறுர்கள் இவர் இப்பதவியை நீண்டகாலம் வகித்து விளையாட்டுத் துறைக்கு அரியசேவைகளை ஆற்றவேண்டும்'' எனக்கூறினுர்.

இவ்விருந்து வைபவத்தில் யாழ் மாவட்ட பிரதம விளையாட்டு உத்தியோகத்தர் திரு. எஸ். மரியதாஸ், யாழ், மாவட்ட உதைபந்தாட்டப் பயிற்சியாளர் திரு எஸ். குணரட்ணம் உட்பட பலர் உரையாற்றினுர்கள்

தனது பிறந்ததின நாளையொட்டி தன்னையும் தனது பாரியாரையும் அழைத்து கௌரவித்த அனைவருக்கும், டாக்டர் ஜே. பி. ஸி. பிலிப் நன்றி கூறினுர்.

### வெற்றி-தோல்வி இல்லை

கடந்த புதன்கிழமை நடைபெற்ற தலைவர் வெற்றிக்கிண்ண பரிசளிப்பு விழாவையொட்டி நடைபெற்ற கண்காட்சி உதைபந்தாட்டப் போட்டியில் பொற்பதி கழகமும் கிறீன்பீல்ட் கழகமும் தலா இரண்டுகோள்கள் போட்டமையால் ஆட்டம் வெற்றி-தோல்வியின்றி முடிவடைந்தது

கோண்டாவில் குமரன் மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டிக்கு திரு ஈ. கே. குமரையா மத்தியஸ்தம் வகித்தார். பிரதம அதிதியாகக்கொ நிதி சேவியர் கலந்துகொண்டு வெற்றிவீரர்களுக்கு பரிசில்களை வழங்கினுர். (வி)

# இன்றைய பலன்

மாதம்: பங்குனி
திகதி: 22 (1986-4-4)
கிழமை: வெள்ளி
திதி: தசமி பி ப. வரை
நட்சத்திரம்: திருவோணம் பி. ப. வரை

மேடம்: பயன்தரும் பிரயாணமொன்று மேற்கொள்ளப்படலாம். மாணவர்களாயின் அதிக முன்னேற்றம் உண்டு. தாய்வழிப் பெருமையும் உண்டு.

இடபம்: புண்ணிய காரியங்களில் உற்சாகம் பிறக்கும். கவர்ச்சிகரமான தினம். பிள்ளைகளினுல் பெருமைக்கும் இடமுண்டு. இல்லத்திலும் இனிமை தென்படும்

மிதுனம்; எண்ணிய காரியத்தில் ஏமாற்றம் தென்படும். கூட்டு வியாபாரத்தால் மோசடி நடக்கலாம். நன்ருகச் சிந்தித்தபின் செயலாற்றுக.

கடகம்: மனை வாழ்வில் மகிழ்ச்சி தென்படும். திரவியலாபத்திற்கும் இடமுண்டு இராக்கசிந்தை மேலிடும்.

சிங்கம்; உணவு விடயத்தில் அதிக கவனம் செலுத்தவும். நண்பர் ஒருவருடன் கருத்து மோதல் ஏற்படும். ஏமாற்றம் தாக்கும். அமைதி நன்று.

கன்னி; பெரியோர் ஆதரவுக்கு இடமுண்டு. தொழிற்துறைகளிலும் நன்மாற்றங்கள் ஏற்படும். குடும்பத்தில் சுமுகமான சூழ்நிலை உருவாகும்

துலாம்: பதவியில் உயர்வுக்கு இடமுண்டு. வியாபாரத்துறையில் முன்னேற்றம் காணப்படும். இடமாற்றத்துக்கான யோசனையும் உருவாகும்.

விருச்சிகம்: வாழ்க்கையில் தென்றல் வீசும் கணவன் மனைவி உறவு அன்புகொண்டதாக இருக்கும் மற்றவர்களின் கவனத்தைத் திருப்புவதில் வெற்றியடைவீர்கள்.

தனுசு: தொழில் துறையில் நஷ்டத்திற்கு இடமுண்டு. கடன் தொல்லைகள் அதிகரிக்கும். புதிய முதலீடுகளைத் தவிர்த்துக் கொள்ளவும்.

மகரம்: அதிகாரப் போதையில் தவறுகள் நடக்கலாம். புனைந்துரைகளால் மனது புண்படும் பொறுமையுடன்

[7ம் பக்கம் பார்க்க]

# யாழ். இந்துக் கல்லூரி ஆசிரியர் அணி வெற்றி!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி ஆசிரியர் அணிக்கும் யாழ்ப்பாணம் வைத்தியசாலையைச் சேர்ந்த வைத்தியர்கள் அணிக்கும் இடையே யாழ். இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற சிநேகபூர்வமான மட்டுப்படுத்தப்பட்ட 20 ஓவர்களைக்கொண்ட கிரிக்கெட் போட்டியில் யாழ் இந்துக் கல்லூரி ஆசிரியர்கள் அணி 26ஓட்டங்களால் வெற்றி பெற்றது,

யாழ் இந்துக் கல்லூரி அதிபர் எஸ் பொன்னம்பலம் தலைமையில் முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ் இந்துக் கல்லூரி ஆசிரியர் அணி 10 விக்கெட்டுக்கள் இழப்பிற்கு 111 ஓட்டங்களைப் பெற்றது. ரி சிவகுமாரன் ஆட்டமிழக்காமல் 60 ஓட்டங்களையும், எம். சிவரூபன் 26ஓட்டங்களையும், எஸ். புண்ணியலிங்கம், எஸ். ரட்ணசபாபதி ஆகியோர் தலா 18 ஓட்டங்களையும் பெற்றனர் டாக்டர் ஜெயச்சந்திரன் 8ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுளையும், டாக்டர்கள் சிறீபதி, கணேசரட்ணம், சிவநேசன் சற்குருநாதன் தலா 1 விக்கெட்டையும் வீழ்த்தினுர்கள்.

பின்னர் துடுப்பெடுத்தாடிய யாழ் வைத்தியசாலை டாக்டர் ள் அணி 10 விக்கெட்டுக்கள் நஷ்டத்திற்கு 85 ஓட்டங்களையே பெற்றுக் கொண்டது. இவ்வணியைச் சேர்ந்த டாக்டர் சிவகுமாரன் ஆட்டமிழக்காமல் 33 ஓட்டங்களையும டாக்டர் ஜெயச்சந்திரன் 13 ஓட்டங்களையும் டாக்டர் சிறீ தி 8 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர். ரி சிவகுமரன் 5 ஓட்டங்களைக் கொடுத்து 5 விக்கெட்டுக்களையும் எஸ்.ரட்ணசபாபதி 4 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினுர்.

சிறந்த சகலதுறை வீரராக யாழ். இந்துச் கல்லூரி அணியைச் சேர்ந்த பீற்றர் சிங்கம் தெரிவானுர். [வி]

# மின் மோட்டர் களவு

[பண்டத்தரிப்பு]

இரவுவேளையில் பண்டத்தரிப்பிலுள்ள விவசாயி ஒருவருக்குச் சொந்தமான 3 ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான மின்சார மோட்டர் ஒன்று திருடப்பட்டுள்ளது.

பயிர்களுக்கு நீர்பாச்சிய பின்பு கிணற்றடியில் விடப்பட்டிருந்த இந்த மோட்டர் திருடப்பட்டதாகத் தெரிவிக்கப் படுகின்றது.


## பிரயாண ஒழுங்குகள்

கனடா, ஜேர்மனி, பிரான்ஸ், டென்மார்க்

ஆகிய நாடுகளுக்கு எமது முகவர்
21-ம் திகதி உங்களை அழைத்துச்செல்வார்.
உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்.

மாலைதீவு, மத்தியகிழக்கு நாடுகளில்

ஆண், பெண் இரு பாலாருக்கும்
வருமானத்திற்கேற்ற ஒழுங்குகள் உடனடியாக
செய்துதரப்படும்.

பாஸ்போட், BOND, ரிக்கற்
முதலியனவும் உடனுக்குடன் செய்து தரப்படும்.

**GROUP ATLANTIC**
HOSPITAL ROAD, JAFFNA.
(அடைக்கலமாதா கோவிலுக்கு முன்பாக)

(A 420)



## LANKA CEMENT LIMITED
KANKESANTHURAI.

## ஏலவிற்பனை

1986-04-06 ஞாயிற்றுக்கிழமை காலை 9-00 மணி முதல் 12-00 மணி வரை
பாவிக்கப்பட்ட துண்டுக்கம்பிகள், முறுக்குக் கம்பிகள், ''ஆங்கில் அயன்'',
எச் ஐ வடிவ உருக்குத் தீராந்திகள் என்பன
லங்கா சீமெந்து லிமிட்டெட் தொழிற்சாலையில் ஏலவிற்பனைக்கு விடப்பட்டுள்ளன.

மேற்படி பொருட்களைப் பார்வையிட விரும்பும் கொள்வனவாளர்கள்
1986-04-05-ந் திகதி சனிக்கிழமை தொழிற்சாலை வளவில் பார்வையிடலாம்.

பொருட்களின் விலையில் 3-ம் கூற்று முடிவடைந்தவுடன் முழுத்தொகையின் 1/3 பகுதிப் பணம் கொள்வனவாளரால் செலுத்தப்பட்டு மிகுதி அடுத்த 24 மணி நேரத்தில் செலுத்தப்பட வேண்டும்.

பொருட்கள் பகுதி பகுதியாக கொள்வனவு செய்வோர் கூறப்பட்ட திகதியான 6-ம் திகதி ஏப்ரல் 1986 இல்லிருந்து 2 நாட்களுக்குள்ளும் முழுக்கூறுகளும் ஒன்ருகக் கொள்வனவு செய்வோர் மேற்கூறப்பட்ட திகதியில் இருந்து 5 நாட்களுக்குள்ளும் தொழிற்சாலை வளவில் இருந்து விற்கப்பட்ட பொருட்களை அகற்றவேண்டும்.

பொதுமுகாமையாளர்,
லங்கா சீமெந்து லிமிட்டெட்.

## லங்கா சீமெந்து லிமிட்டெட்,
காங்கேசன்துறை.

1986-03-29. (A 419)



## JAFFNA COLLEGE TECHNICAL INSTITUTE
VADDUKODDAI.

## புதிய கல்வி ஆண்டு 1986/87

| TECHNICIAN DIPLOMA COURSES | YEARS வருடம் | SEMESTERS தவணை |
|---|---|---|
| 1. Electronics and Telecommunication இலத்திரன் தொலை தொடர்பு நுண்ணியல் | — 3 | 6 |
| 2. Electrical Power Engineering மினனியல் பொறிமுறை | — 2 | 4 |
| 3. Mechanical Engineering இயந்திர பொறியியல் | — 2 | 4 |
| 4. Building Construction and Quantity Surveying கட்டிடக்கலை அளவியல் | — 2 | 4 |
| 5. Draughtmanship (Civil) கட்டிட டட வரைஞர் | — 1 | 2 |

(தவணைப் பணம் ரூ. 750/- கட்டுப்பணம் ரூ 200/-)

பயிற்சி நெறிகள், தேர்ச்சி பெற்ற ஆசிரியர்களாலும்
பொறியியலாளர்களாலும்
City and Guilds of London Institute பரீட்சைகளின்
தராதரத்தில், ஆங்கில மொழியில் நடாத்தப்படும்.
G. C. E (O/L) பரீட்சையில் கணிதம், விஞ்ஞானம் உட்பட
3 பாடங்களில் விசேட சித்தியுடன்
மொத்தம் 6 பாடங்களில் சித்திபெற்ற
அல்லது
G C. E. (A/L) பரீட்சையில்
2 விஞ்ஞான பாடங்களில் சித்திபெற்ற
20 வயதுக்கு உட்பட்ட இரு பாலாரும்
விண்ணப்பிக்கலாம்.
விடுதி வசதிகளும் உண்டு.
வறிய திறமையுள்ள விண்ணப்பதாரர்களுக்கு
தவணைப் பண சலுகைகள் பெற வாய்ப்புண்டு.
விண்ணப்பப்பத்திரமும் கைநூலும் ரூ 15/-
காரியாலயத்தில் பெற்று (முத்திரையுடன் விலாசமிட்ட
கடித உறையும் M. O Rs 15/- அனுப்பி)
விண்ணப்பிக்கவும்

முடிவு திகதி: 30-4-86.

இயக்குநர்.

(A 423)

# அறிவித்தல்

## மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்

வழ.இல: 72/நம்பிக்கைச் சொத்து.

**இணுவில் கந்தசாமி கோவில்தர்மகர்த்தாக்களைத் தெரிவதற்கான வாக்காளர் பட்டியல் தயாரித்தல் பற்றியது.**

மேற்கூறிய வழக்கில் மல்லாகம் மாவட்ட நீதிபதி அவர்கள் 5-12-85 இல் இட்ட இணக்கக் கட்டளையின்படி வாக்காளர் பட்டியல் ஒன்று என்னால் தயாரிக்கப்படும். இப்பட்டியலானது:

(அ) 22-10-1979ல் இணுவில் சந்தசுவாமி கோவில் தர்மகர்த்தா சபைத் தேர்தல் சம்பந்தமாகத் தயாரிக்கப்பட்ட வாக்களர் பட்டியல்.

(ஆ) 395ஆம் இலக்க நம்பிக்கைச் சொத்து வழக்கில் 6-7-1955 இல் தயாரிக்கப்பட்ட சந்ததிப் பரம்பரைத் தர்மகர்த்தாக்களின் பட்டியல்.

ஆகிய இரண்டையும் அடிப்படையாக வைத்துத் தயாரிக்கப்படும் இதற்கான நிபந்தனைகள் பின்வருமாறு:-

(1) இக்கோவிலின் பொது முகாமைத். திட்டத்தின் 4ஆவது விடயத்தில் குறிப்பிட்டது போன்று மேற்குறித்த கோவிலின் திருவிழாக்கள், முக்கிய பூசைகள் ஆகியவற்றைத் தொடர்ச்சியாக 31-12-1985க்கு முன் 5 வருடங்களுக்கு மேலாக செய்து வருபவர்களே பட்டியலில் சேர்க்கப்படுவர். ஏதேனும் காரணத்தினால் 22-10-1979 ஆம் திகதிய பட்டியலில் இடம் பெற்ற பெயர்களில் எவையேனும் நிராகரிக்கப்பட வேண்டியிருப்பின் அவை பதிவாளரால் ஆராயப்பட்டு நிராகரிக்கப்படுவன.

(2) சந்ததிப் பூசை உரிமைகள் கோருபவர்களின் பெயர்களும் மேற்பட்டியலில் இடம் பெறும்.

(3) பரம்பரைப் பூசகர்கள் தங்களைப் பட்டியலில் சேர்த்துக்கொள்ளும்படி மனுச் செய்யவேண்டும். அவ்வாறு மனுச் செய்யாதவர்கள் பட்டியலில் சேர்த்துக் கொள்ளப்படமாட்டார்கள் இதற்குக் காரணம் பரம்பரைப் பூசகர்களின் உரித்துக்களானது தற்போது மேன்முறையீட்டிலிருப்பதே.

(4) 395ம் இலக்க நம்பிக்கைச் சொத்து வழக்கில் 6-7-1955இல் தயாரிக்கப்பட்ட சந்ததிப் பரம்பரைத் தர்மகர்த்தாக்களின் பட்டியலில் காணப்படும் பெயர்கொண்டவர்களும் புதிய பட்டியலில் தமது பெயர்களைச் சேர்த்துக் கொள்ளுமாறு விண்ணப்பிக்க வேண்டும். அவ்வாறு விண்ணப்பிக்கும்போது மேற்குறித்த சந்ததி பட்டியலில் தம பெயர் ஏற்கனவே இடம் பெறுவதைப் பற்றி பதிவாளருக்கு அவர்கள் தெரிவிக்க வேண்டும்.

மேற்குறிப்பிட்ட நிபந்தனைகளுக்கமைய என்னால் தயாரிக்கப்படப்போகும் பட்டியலில் சேர்க்ப்படவேண்டும் எனக் கோரப்படும்விண்ணப்பங்கள், விண்ணப்பதாரர்களின் தகைமைகள் பற்றி நிர்ணயிக்கப்படுவதற்காக 18-4-1986க்கு முன்னர் எனக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்கப்பட வேண்டும். அதன்பின்பு விண்ணப்பதாரரின் பெயர்கள் ஏற்றுக்கொள்ளப் படமாட்டா.

என்னால் 18 4-86க்குப் பின்னர் இருவார காலத்தினுள் தயாரிக்கப்படும் பட்டியலின் பிரதிகள் இந் நீதிமன்றில் அறிவித்தல் பலகையிலும், இணுவில் கந்தசாமி கோவில் அறிவித்தல் பலகையிலும் பார்வைக்காக வெளியிடப்படும்.

தயாரித்து வெளியிடப்படும் பட்டியலில் உள்ள எவரேனும் ஒருவரின் பெயருக்கு ஆட்சேபனைகள் தெரிவிக்க வேண்டியிருந்தால் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து இரண்டுவார காலத்தினுள் அத்தகைய ஆட்சேபனைகள் எழுத்தில் எனக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும். காலம் பிந்திய ஆட்சேபனைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா இந்த ஆட்சேபனைகள் மன்றினால் பரிசீலிக்கப்பட்டபின்னர் மன்றினால் ஏற்றுக்கொள்ளப்படும் பட்டியல் இக்கோவிலின் உத்தியோக பூர்வமான வாக்காளர் பட்டியலாக இனிவரப் போகும் தர்மகர்த்தாத் தேர்தலுக்கு மட்டும் ஏற்றுக்கொள்ளப்படும் அதன்பின்னர்முகாமைத் திட்டத்திற்கமைய அது திருத்தியமைக்கப்படும்.

நீதிமன்றக் கட்டளைப்படி.

1986-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31-ம் திகதி.

ஆழ்வார் சிவபாதசுந்தரம்
பதிவாளர்,
மாவட்ட நீதிமன்றம்,
மல்லாகம்
[A 543] 31-3-86.

# புதிய நிர்வாகிகள்

[யாழ்ப்பாணம்]

இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்க யாழ். கிளையின் புதிய செயற்குழு விபரம் வருமாறு: தலைவர் பேராசிரியர் நந்தி,

உப தலைவர்கள் பேராசிரியர் கா. சிவத்தம்பி, வரதர், நீர்வை பொன்னையன், செ. க., தெணியான், திரு இ முருகையன், ஈழத்துச் சோமு

இணைச் செயலாளர்கள்: கலாநிதி சபா. ஜெயராசா, சாந்தன்.

பொருளாளர்: திரு. க சண்முகலிங்கம். செயற்குழு உறுப்பினர்கள்: திரு. இ. சிவானந்தன், கலாநிதி. சி மௌனகுரு, கலாநிதி சோ. கிருஷ்ணராசா, திரு. எஸ் அகஸ்தியர், திருமதி கோகிலா மகேந்திரன், திரு டொமினிக் ஜீவா, திரு. சிதம்பர திருச் செந்தில்நாதன், திரு வே சிவராசா, திரு. பூ ஸ்ரீதர் சிங்.

0 0 0

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம், ஈச்ச மோட்டை, கலட்டிப்புலம். ''அருள்மிகு'' ஸ்ரீ ஞானவைரவர் தேவஸ்தான வருடாந்த பொதுக் கூட்டம் கடந்த 23 ம் திகதி நடைபெற்றது. நடப்பு வருட நிர்வாகசபைத் தெரிவில் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் த. தியாகராசா, செயலாளர் து. கமலநாதன், பொருளாளர் வ. க. சின்னத்துரை உறுப்பினர்களாக தி. ஜெகநாதன், ச. தவசீலன், து. குலசேகரம், சி தியாகராசா ஆகியோர் தெரிவானார்கள்.

0 0 0

[இறுப்பிட்டி]

புங்குடுதீவு பெருங்காடு மூத்த நயினார் புலம் ஸ்ரீ வரசித்தி விநாயகர் ஆலயத்தின் புதிய நிர்வாகிகள் தெரிவு அண்மையில் இடம்பெற்றது

தலைவராக மா. பொ. முருகேச பிள்ளையும் செயலாளராக கா. நித்தியானந்தனும், பொருளாளராக வை. மயில்வாகனமும் தெரிவு செய்யப்பட்டனர். இவர்களுடன் நிர்வாக சபை உறுப்பினராக 15பேரும் தெரிவானார்கள்.

0 0 0

(பண்டத்தரிப்பு)

தெல்லிப்பழை வடமேற்கு இளவாலைப் பகுதி பிரஜைகள் குழுவின் அங்குரார்ப்பணப் பொதுக்கூட்டம் அண்மையில் நடைபெற்றபோது அதன்நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்:- ஆ. தா. ஆறுமுகம், துணைத் தலைவர்கள்;- மு. சிவராசரத்தினம், ரி. ஜி சின்னையா, இணைச் செயலாளர்:- ஆ நடராசா, இ. நாகேந்திரராசா, பொருளாளர்:- டாக்டர் செ. பத்மநாதன். செயற்குழு உறுப்பினர்களாக ஒன்பது பேர்கள் தெரிவுசெய்யப்பட்டனர்.

# இன்றைய பலன்

[6ம் பக்கத் தொடர்ச்சி]

உடல்நலத்தைப் பேணவும்.

கும்பம்: வாழ்க்கைப் பூங்காவில் வசந்தம் நிலவும். சுப கருமங்கள் இடம்பெறும். காரியத்தில் கண்வைக்கவும் மகிழ்ச்சிகரமான தினம்.

மீனம்: நினைவின் நிழலாட்டம் நிம்மதியை சிதறடிக்கும், கருத்து வேற்றுமைகள் கலகத்துக்கு இடமளிக்கும் ஆராய்ந்து செயலாற்றவும்.

திருமலை
வே. ரவீந்திரன்

# 31-ம் நாள் நினைவஞ்சலி



**நயினை நாகமுத்து செல்லாச்சி அவர்கள்**

அன்னையின் மடியில்:
13-2-1906

மண்ணின் மடியில்:
5-3-1986

''எமைப் பெற்றவள் நாம் இனிப் பெறமுடியாதவளாகி விட்டாள். குடும்பத்தின் ஒளிவிளக்காய் குன்றாக அன்புடனும் பிரித்திடவே முடியாத பெரும பாசத்துடனும் எம்மை எல்லாம் நீர் ஆதரித்து ஏற்று வளர்த்து வந்தீர். எங்கள் எதிர்காலம் நன்றாய் அமைந்திடவும் நலங்கள் பெருகிடவும் வாழ்வுயர வேண்டும் என்றும் வளம் பெருகவேண்டும் என்றும் கனவு கண்டிருந்தீர்கள். அக்கனவுகள் மெய்சனவாய் ஆகிடவே மறைவாகவே நின்று நிறைவாகும் வண்ணம் ஆசி அளித்திடுவீர். அம்மா நாம் போற்றுகின்றோம் அம்பிகையின் ஆலயத்தில் அடுத்து நம் தீவகத்தில் வெங்கொடுமையால் ஏற்பட்ட வேதனைதான் தாங்காது-மின்னுமல் முழங்காமல் மீளாத்துயில் பெற்றுவிட்டீர்கள் ஆருத்துயரில் ஆழ்த்திவிட்டு எம்மை எல்லாம் வேறாய் பிரிந்து வெகு தூரம் சென்றுவிட்டீர்கள். சற்றுப் பிரிந்திருந்தால் தாங்கிடவே மாட்டீர்கள் எப்படித்தான் அம்மா நீர் எமை மறந்து சென்றீரா சற்றும் பிரிவறியாய் பிரிந்தாய் என்னே இனி உன்னை நாம் மறவாமல் நின்று ஏத்துவமே.

சொர்க்கம் என்பது எங்கும் இல்லை அது அன்னையின் காலடியில் மட்டும் உண்டு

அன்னையாய் நின்று அனைத்துமே ஈந்து தனையே உருக்கிய தாயடி சரணம்

உன் புனித ஆத்மா சாந்தியடைய அன்னை பராசக்தி ஆசீர்வதிப்பாளாக எனக் கசிந்துருகிக் கண்ணீர் மல்கி வேண்டி நிற்கின்றோம்.

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்
[C 1576]

# கரப்பந்தாட்டப் பயிற்சி

[உடுவில்]

யாழ்ப்பாணம் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் பாடசாலை மாணவர்களுக்கான புதிய கரப்பந்தாட்ட பயிற்சி முறையை அறிமுகம் செய்வதற்கு மானிப்பாய் வட்டாரக்கல்வி அதிகாரி ச தனஞ்செயன் முன் வந்துள்ளார்

இப் பயிற்சியில் பங்குபற்ற விரும்பும் மானிப்பாய் வட்டார பாடசாலை அதிபர்கள் ஆறு மாணவர்களுக்குக் குறையாமல் பங்குபெறக்கூடிய மாணவர்களின் பெயர் பட்டியலை தமக்கு அனுப்பி வைக்குமாறு வட்டாரகல்வி அதிகாரி அதிபர்களைக் கேட்டுள்ளார்.

இப் பயிற்சியில் பங்கு பற்றும் மாணவர்கள் 15 - 17 வயதுக்குட்பட்டவர்களாக இருக்க வேண்டும் என்றும் இப் பயிற்சி ஏப்ரல் மாதம் 7 ம், 8 ம், 9 ம். திகதிகளில் இணுவில் சைவ மகாஜன மகா வித்தியாலயத்தில் நடைபெறும் என்றும் தெரிவித்துள்வார்,

# வட்டார விளையாட்டுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ் நல்லூர் கல்வி வட்டார விளையாட்டுப் போட்டிகள் கடந்த 1 ம் திகதி தொடக்கம் நல்லூர் வட்டாரக் கல்வியதிகாரி சு. சிவவிநாயகமூர்த்தி தலைமையில் நடைபெற்று வருகின்றன.

பெண்களுக்கான நிகழ்ச்சிகள் யாழ் இந்து மகளிர் கல்லூரி விளையாட்டு மைதானத்திலும், ஆண்களுக்கான நிகழ்ச்சிகள் கொக்குவில் இந்துக் கல்லூரி விளையாட்டு மைதானத்திலும் நடை பெறுகின்றன.

இவற்றுக்கான ஒழுங்குகளை நல்லூர் வட்டார விளையாட்டுக் குழு செய்துள்ளது.

[பி]

# அரியாலை மேற்கு மக்கள் முன்னேற்றச் சங்கத்தின் பணிகள்

[யாழ்ப்பாணம்]

நாட்டின் பொருளாதாரம் கிராமங்களிலேயே பெரிதும் தங்கியுள்ளது. அரியாலை கிழக்கு கிராம சேவையாளர் பிரிவு ஒரு பின்தங்கிய கிராமமாகும். இக்கிராமம் நீண்ட காலமாக கவனிப்பாரின்றிக் கைவிடப்பட்ட நிலையில் இருந்தது இப்பகுதி மக்களின் கல்வி வசதி போக்கு வரத்து வசதி மருத்துவ வசதிகள் நினைத்துப் பார்க்க முடியாத நிலையில் பலவீனமாக இருந்ததை சிந்திக்கும் திறன் வாய்ந்தஇதயங்கள் பொறுக்கமாட்டா. இவ்வாறு அரியாலை மேற்கு மக்கள் முன்னேற்றச்சங்கம் ஒத்துழைப்புத் தந்திடுவீர் என்ற தலைப்பில் வெளியிட்டுள்ள துண்டுப்பிரசுரத்தில் தெரிவித்துள்ளது.

நிறைவேற்றப்பட்ட செயற் திட்டங்கள் என்ற வரிசையில் குன்றும் குழியுமாகவிருந்த வீதி ஊைத்திருத்த நடவடிக்கைகள் எடுத்தமை வாசிகசாலை ஒன்று நாவலடியில் அமைக்க உதவியமை களைத்தனமாக மணல் ஏற்றியமையை நெறிப்படுத்தியமை உட்பட பல விடயங்கள் குறிக்கப் பட்டுள்ளன எதிர் காலத் திட்டங்கள் பலவும் இப்பிரசுரத்தில் குறிக்கப்பட்டுள்ளன. இவைகளை நிறைவேற்ற மக்களின் ஒத்துழைப்பு ஆலோசனைகளை விமர்சனங்களை மேற்படி சங்கம் எதிர் பார்ப்பதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

[ஐ]

**யாழ். சட்டக்கல்வி நிலையம்**

மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

First in Laws (சட்ட முதற்பரீட்சை) விரிவுரைகள் ஆரம்பமாகிவிட்டன. க. பொ. த. உயர்தரம் சித்தி பெற்றோர் அனுமதிக்கப்படுவர்.

C-1537 பதிவாளர்,

**பணிவான வேண்டுகோள்**

26 ஸ்ரீ 1605 இலக்கமுடைய எனது TATA லொறியை 18-3-86இல் ஆயுதந்தாங்கிய சிலர் வந்து பயமுறுத்தி மூன்று நாட்களுட் திருப்பித் தருவதாகக் கூறி எனது மாதகல் வளவிலிருந்து வெளியே கொண்டு சென்றனர். இரு வாரங்களாகியும் திருப்பித்தரவில்லை. தயவுசெய்து புனித இயக்கங்கள் இதில் முயற்சித்து எமது வாகனத்தை எடுத்துத்தருமாறு மிகவும் பணிவன்புடன் வேண்டுகின்றேன்.

சூ. அ. செல்வராசா,
பற்றிமா வீதி, மாதகல் [C 1575]

**COMPUTER PROGRAMMING**
**in B. B. C. BASIC**
**(Extended Basic)**

எமது அடுத்த வார இறுதி வகுப்புகள் 6-4-86 ஞாயிறு காலை 10 மணிக்கு ஆரம்பமாகின்றன.

காலம்: 4 மாதம்
கட்டணம்: 1000 ரூபா
முகவரி: J. SATHIADAS
78, KANDY Rd,
CHUNDIKULI
(கச்சேரிக்கும் றெயில்வேக் கடவைக்கு மிடையில்)
[A 542]

## இலங்கை இனப்பிரச்னைத் தீர்வு:

# "பேச நிறையவிஷயமுண்டு பேச முன்வருவாரில்லை" — லலித்

### 'யூனியன் பிரதேச அதிகார' வதந்தியில் உண்மையில்லையாம்

(கொழும்பு)

''இலங்கை இனப்பிரச்னைத் தீர்வு குறித்துப் பேச்சுக்கள் நடத்தவும், திட்டங்கள் போடவும் நிறைய விஷயங்கள் உண்டு. ஆனால் இப்பிரச்னையில் சம்பந்தப்பட்ட எவரும் பேச்சுவார்த்தைகளுக்கு முன்வருவதாக இல்லை'' என்று தேசிய பந்தோபஸ்து அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலி தெரிவித்துள்ளார்.

ஆங்கிலத் தினசரி 'தி ஐலண்டு'க்கு வழங்கிய பிரத்தியேகப் பேட்டியொன்றிலேயே திரு. லலித் அத்துலத்முதலி மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது:

''இலங்கை விவகாரம் தொடர்பாக இந்தியாவுக்கு இலங்கை அரசின் பிரதிநிதிகள் எவரும் அனுப்பி வைக்கப்பட மாட்டார்கள்.

''இலங்கை அரசு இவ் விவகாரம் தொடர்பாக ஆக்கபூர்வமால நடவடிக்கைகளை மேற்கொள்வதிலேயே ஆர்வமாக உள்ளது.

''இந்தியாவின் நல்லெண்ண உதவிகளை இலங்கை அரசு தொடர்ந்து வரவேற்கிறது, ஆனால் இதுதொடர்பாக முன்னாள் இந்திய வெளியுறச் செயலாளர் திரு. ரொமேஷ் பண்டாரி இந்த ஏப்ரல் நடுப்பகுதியில் இலங்கை வருவார் என்ற செய்தியை நாம் மறுக்கிறோம்.

''இலங்கை இனப்பிரச்னை குறித்துத் தமிழ் தலைவர்களுடனும் தீவிரவாதிகளுடனும் பேச்சுக்கள் நடத்தவே நாம் தயாராகவுள்ளோம். இதன் காரணமாகவே வடபகுதியில் விமானத் தாக்குதல் உட்பட இராணு நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தியுள்ளோம். ஆனல் எமது எதிர்பார்ப்புகள் வீணாகியுள்ளன. எமது விருப்பத்தை தமிழ்த் தலைவர்கள் உதாசீனஞ்செய்து வருகிறார்கள். இதுவரை எம்முடன் அவர்கள் எந்தவித சமரச முயற்சிக்கும் உடன்படமுன்வரவில்லை.

''இந்தியாவில் இருப்பது போன்ற 'யூனியன்' பிரதேச அதிகார அமைப்பு ரீதியில் இலங்கைப் பிரச்னைக்கும் தீர்வு சாண்பதற்கு முயற்சிக்கப்படுகிறது எனப் பேசப்படுகிறது. ஆனல் அத்தகைய யோசனை எதனையும் நாம் கொண்டிருக்கவுமில்லை, ஆராயவுமில்லை. (கி)

## கொள்ளை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியிலுள்ள விக்ரர் அன் சன்ஸ் நிறுவனத்தின் கூரையைப்பிரித்துக்கடந்த முதலாந் திகதி இரவு இனந்தெரியாத நபர்கள் சுமார் ஒரு லட்சம் ரூபா பெறுமதியான உயர் ரக 'டெக்' மற்றும் ஒளிபரப்பு உபகரணங்களைக் கொள்ளையடித்துச்சென்றுள்ளனர்.

கொள்ளைச்சம்பவம் நடைபெற்றதற்கு முன்தினம் இரவு 'டாக்ஸி'யொன்றில் வந்த இனந்தெரியாத நபர்கள் கூரையின் 'சீற்று'களை அகற்றிவிட்டுச் சென்றதாகவும் இதைத் தொடர்ந்து மறுநாள் இரவு நான்குஊழியர்கள் நிறுவனத்தில் தங்கியிருக்க முடிவுசெய்ததாகவும் தவிர்க்க முடியாத காரணத்தினல் அவர்கள் தங்க முடியமற்போனதாகவும் நிறுவனப் பொறுப்பாளர் தெரிவித்தார்.

## காயமடைந்தவர் மரணம்

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை தொகுதியில் நேற்று முன்தினம் நடந்த ஹெலிக்கொப்டர் தாக்குதலில் காயமடைந்து யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட ஒருவர் நேற்று மரணமானார். (க)

## 'ரயில் வே'க்கு 17 கோடி ரூபா நஷ்டம்!

[கொழும்பு]

ரயில்வே திணைக்களத்தின் உடைமைகள் மீது தீவிரவாதிகள் கடந்த நான்கு ஆண்டுகளாக மேற்கொண்டுவரும் தாக்குதல் சம்பவங்களினல் இத்திணைக்களம் பதினேழு கோடி ரூபா நஷ்டம் அடைந்துள்ளதாகவும், 1981ம் ஆண்டு முதல் வடக்கு கிழக்கு மாகாணங்களில் ரயில் வண்டிகள் மீதும், ரயில்நிலையங்கள் மீதும் தீவிரவாதிகள் தாக்கியும் கொள்ளையடித்தும் வருகிறார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது. [பி]

## க. பொ. த-

[1 ம் பக்கத் தொடர்ச்சி]

### யாழ்ப்பாணம் அனுப்ப விசேஷ ஏற்பாடு

ஜி சி. ஈ. (சாதாரணம்) பரீட்சை முடிவுகளை யாழ்ப்பாணம் அனுப்ப விசேஷ ஏற்பாடுகள் செய்யப்படுவதாகவும் கூடிய கெதியில் பரீட்சைமுடிவுகள் கிடைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் பரீட்சைத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன. (க)

## கள்ள நோட்டு: அரசியல்வாதியை விசாரிக்க அனுமதி

(கொழும்பு)

அண்மையில் பெரும் பரபரப்பை ஏற்படுத்திய 92 லட்சம் ரூபா கள்ளநோட்டு விவகாரம் தொடர்பாக ஒரு அரசியல்வாதி சி ஐ. டியினரால் விசாரணைக்குட்படுத்தப்படவுள்ளார் எனத் தெரிய வருகின்றது.

மேற்படி அரசியல்வாதியை விசாரணை செய்து அவரது சாட்சியத்தைப் பதிவு செய்வதற்கு சி. ஐ. டி இலாகாவுக்கு சட்டமா அதிபர் நேற்று அனுமதி வழங்கியுள்ளார்.

இவ்விவகாரம் தொடர்பாக சி ஐ டி. இலாகாவினல் ஏற்கனவே விசாரணை செய்யப்பட்ட பதினெரு பேர் தற்சமயம் தடுப்பு காவலில் வைக்கப்பட்டுள்ளனர். (ஷ)

## லொறியில் வந்த வர்த்தகர் மாங்குளம் முகாமில்

### பஸ்கள் திரும்பின

[வவனியா]

நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணத்திலிருந்து வவனியாவுக்கு வந்த வர்த்தகர் சண்முகராஜாவும். அவர் பிரயாணம்செய்த லொறியும் லொறிக்சாரதி கிளீனருடன் மாங்குளம் ராணுவமுகாமருகில் தடுத்து வைக்கப்பட்டுள்ளது.

### படைகள் பயணம்

நேற்றுக்காலை ஆயுதப்படையினர் பண்டாரிக்குளம் மன்னார் வீதியில் அம்மன் கேயில் 2ம் கட்டைப்பகுதிக்கு வாகனங்களில் பெருமளவில் சென்றனர் இதனல் அப்பகுதியில் பெரும்பதற்றம் நிலவியது.

கொழும்பிலிருந்து வந்து காணமல்போனதாகக் கூறப்பட்ட மூன்று பஸ்கள் நேற்று மாங்குளத்திலிருந்து யாழ்ப்பாணம் புறப்பட்டுச்சென்றன.

### தபால்நிலையம் அருகில் குண்டு

முருங்கன் தபால் நிலையம் அருகில் நிலக்கண்ணிவெடியொன்றை ராணுவத்தினர் கண்டுபிடித்திருப்பதாகத்தெரிகின்றது. இதையடுத்து அத்தபால் நிலயத்தில் பணிபுரியும் 3 பேரை ராணுவத்தினர் கூட்டிச்சென்றுள்ளனர்.

## யாழ். ப. நோ. கூ. ச. ஊழியர்கள் கோரிக்கைகள் நிறைவேறின வேலைநிறுத்தம் வாபஸ்

(யாழ்ப்பாணம்)

யாழ். பலநோக்குக் கூட்டுறவுச்சங்க ஊழியர்கள் முன்வைத்த மூன்ருவது கோரிக்கையும் சங்க நிர்வாகிகளால் ஏற்றுக்கொள்ளப்பட்டதையடுத்து மூன்று நாட்களாக நடைபெற்றுவந்த சங்க ஊழியர்களின் வேலைநிறுத்தம் நேற்றுப் பிற்பகல் 2 மணியுடன் விலக்கிக்கொள்ளப்பட்டது.

ஏற்கனவே யாழ். ப. நோ. கூ. சங்க ஊழியர்கள் முன்வைத்த இரு கோரிக்கைகள் சங்க நிர்வாகிகளால் ஏற்றுக்கொள்ளப்பட்டது தெரிந்ததே. அதனுடன் திரு. எஸ். எஸ். மனோகரனுக்கு நிபந்தனையின்றி வேலை வழங்க வேண்டும் என்ற மூன்ருவது கோரிக்கையும் இணங்கப்பட்டது.

இதேவேளை தமது பதவியை ராஜினமாச்செய்த கூட்டுறவு உதவி ஆணையாளர் திரு. எஸ். வேலாயுதபிள்ளை பலரது வேண்டுகோளையடுத்து தமது ராஜினமாவை வாபஸ்பெற்றுக்கொண்டார். [க]

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1986-ம் ஆண்டு சித்திரை மாதம் 4-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B 1003/81 Eelanadu P. O. Box 49, Telegram, Eelanadu, Telephone, 22389, 24126

## கேரதீவு—சங்குப்பிட்டியில் ஹெலிகொப்டரிலிருந்து சூடு

### பிரயாணிகள் அவலம்

(பூநகரி)

நேற்று முன்தினம் காலை பத்தரை மணியளவில் கேரதீவு-சங்குப்பிட்டிப் பகுதியில் [illegible] ஹெலிகொப்டர் நாலாபுறமும் துப்பாக்கிப் பிரயோகஞ் செய்ததைத்தொடர்ந்து மேற்படி கிராமங்களின் இருதுறைகளிலும் நின்ற பிரயாணிகள் பெரும் அல்லோலகல்லோலப்பட்டனர்.

இத் துப்பாக்கிப் பிரயோகத்தினல் உயிரிழந்தோர் காயமடைந்தோர் பற்றிய விபரங்கள் இன்னும் கிடைக்கவில்லை.

## நயினை மக்கள் வீட்டுக்குத் திரும்புகின்றனர்


(நயினதீவு)

நயினதீவு பாவனையற்றக் கிடந்த விகாரை கடந்த மாதம் 31ம் திகதி [திங்கள்] இரவு குண்டுவைத்துத் தகர்க்கப்பட்டதையடுத்து அச்சத்தினல் வீடுகளைவிட்டு வெளியேறிய குடும்பங்கள் தற்போது தத்தம் வீடுகளுக்குத் திரும்பிக்கொண்டிருக்கின்றனர்.

இச்சம்பவத்தின் காரணமாகப் படையினர் ஏதாவது அசம்பாவிதங்களில் ஈடுபடலாமென்ற அச்சத்தினலேயே மக்கள் வீடுகளைவிட்டு வெளியேறினர். எனினும் அசம்பாவிதமெதுவும் இடம்பெறமாட்டாதென உறுதியளிக்கப்பட்டதாலேயே மக்கள் வீடுகளுக்குத் திரும்புகிறார்கள். இச்சம்பவத்தின்போது புத்தவிகாரைக் குச்சமீபமாகவிருந்த வீடுகளின் கூரைகளும், கதவுகளும் யன்னல்களும் சேதத்துக்குள்ளாகின!

## மரண அறிவித்தல்

### செல்வன். எஸ். சிவராமலிங்கம்



சோ. சிவராமலிங்கம்அகாலமரணமானார். அன்னரின் ஈமக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும். C-1583

### திரு. சரவணமுத்து விஸ்வலிங்கம்

சுதுமலை தெற்கைச் சேர்ந்த இளைப்பாறிய கல்வி அதிகாரி சரவணமுத்து விஸ்வலிங்கம் 29-03-86 காலமானர். அன்னரின் ஈமக்கிரியைகள் 05-04-86 சனிக்கிழமை காலை 9 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று தாவடி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் இவ் அறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும். C 1591

### மனேரஞ்சிதம் செல்லத்துரை

உரும்பிராயைச் சேர்ந்த மனேரஞ்சிதம் என்று அழைக்கப்படும் S. செல்லத்துரையின (Ashram - Jesus Calls) அன்பு மனைவி 31-3-1986 திங்கட்கிழமை 58, Trott Square, Scarborough, Ontario M-1 B-1 V8 கனடாவில் காலமாகிவிட்டார். இவர் அதிசயம் (கனடா), தபீத்தாள் (கனடா), ஆனந்தன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத்தாயாரும். Hunt சந்திரன் ஆகியோரின் மாமியாரும், V. A துரைராஜா (உடுவில்) V. பாலசிங்ம் (சிங்கப்பூர்), பென்ஜமின் செல்வரட்ணம் (ஏழாலை) ஆகியோரின் அருமைச் சகோதரியுமாவார். நல்லடக்கம் 2-4-1986ல் கனடாவில் நடைபெற்றது. உற்றார் உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

தகவல் - V. S. துரைராஜா, உடுவில்.

C 1579

### திரு. கே. துரையப்பா

(பழம்றோட் ஓவசியர்)

கே. துரையப்பா (இளைப்பாறிய P.W.D. ஓவசியர், கண்டி) காலமாகிவிட்டார் அன்னர் சுந்தரத்தின் அன்புக்கணவனும், இராஜமணி, தவமணி காலஞ்சென்ற பரராசசிங்கம் ஆகியோரின் அன்புத் தந்தையும், A. சிவயோகநாதன் (C T. B. பயிற்சி அதிகாரி, யாழ்ப்பாணம்), எஸ். சதானந்தன் (Registrar) அவர்களின் அன்பு மாமனுமாவார். அன்னரின் ஈமக்கிரியைகள் 4-04-86 (இன்று) வெள்ளிக்கிழமை திருநெல்வேலி சந்திக்கருகாமையிலுள்ள அன்னரின் இல்லத்தில் நடைபெறும்.

A. சிவயோகநாதன், திருநெல்வேலி சந்திக்கருகாமை, 'யமு அகம்',

(C 1570)